பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஐப்பசி 24 | வெள்ளிக்கிழமை 10.11.20174 | கதிர் 05

## அரச ஊழியருக்கு ஏமாற்றம்

2018 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்கள் மற்றும் தனியார் துறையினர் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இலங்கையில் வாழ்க்கைச் செலவு, பயணச் செலவு மற்றும் தனிப்பட்ட செலவுகள் அதி கரித்துள்ளன.

பக்கம் 18 >>>

# மங்களவின் தொழிற்றுறை ஊக்குவிப்பு பட்ஜெட்டில்

# வடக்கு – கிழக்குக்குத் தாராளம்



யாழ்ப்பாணம், நவம்பர் 10

**நல்லாட்சி அரசினால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தொழிற்றுறையை ஊக்குவிப்பதற்கான வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கே அதிகளவு சலுகைகள், நன்மைகள், அபிவிருத்திப் பணிகள் என்பன அறிவிக்கப்பட்டிருந்தன.**

பக்கம் 18 >>>

**மொத்த வருமானம் – 2 லட்சத்து 32 ஆயிரத்து 600 கோடி ரூபா**
**மொத்த செலவீனம் – 3 லட்சத்து 100 கோடி ரூபா**
**துண்டுவிழும் தொகை – 67 ஆயிரத்து 500 கோடி ரூபா**

## ரூ.270 கோடியில் வட,கிழக்கில் ஐம்பதாயிரம் கல் வீடுகள்



வடக்கு – கிழக்கில் செங்கல் மற்றும் கல்கொண்டு 50 ஆயிரம் வீடுகளை அமைத்து வழங்க 270 கோடி ரூபா ஒதுக்கப்பட்

பக்கம் 18 >>>

## வடக்கு - கிழக்கில் மக்களின் மீள்குடியமர்வுக்கு ரூ.300 கோடி

வடக்கு – கிழக்கில் மீளக் குடியமரும் நடவடிக்கைக் காக 300 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்படுவதாக நிதியமைச்சர் மங்கள தெரி

பக்கம் 18 >>>

## யாழ். பல்கலைக்கழகத்துக்கும் நிதி




யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் புதிய நூல் நிலையம் ஒன்று அமை

பக்கம் 18 >>>

## காரைநகர் மீன்பிடித்துறையை புனரமைக்கவும் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் – காரை நகர், சிலாபம், பூரணா வெல்ல மற்றும் மிரிஸ்ஸ ஆகிய மீன்பிடித் துறை முகங்களைப் புனரமைப்ப

பக்கம் 18 >>>

## யாழில் பொருளாதார மையம்




தம்புளை மற்றும் கொழும் புடன் இணைக்கப்பட்டதாக நவீன பொருளதார மையம் ஒன்று யாழ்ப்பாணத்திலும் நிறுவப்படவுள்ளது. இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்

பக்கம் 18 >>>

## நந்திக்கடலை சீரமைக்கவும் நிதி

2018ஆம் ஆண்டில் புத்தளம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத் தீவு – நந்திக்கடல் போன்ற 10 களப்புகளைச் சீர

பக்கம் 18 >>>

## கடன் பிரச்சினைக்குத் தீர்வு




வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடன் பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளவர்களுக்குச் சிறிய வட்டியி

பக்கம் 18 >>>

## உள்நாட்டு உற்பத்தி உயர்வு

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 11.5 சதவீதத்திலிருந்து 14.2 சதவீதமாக அதிகரித்துள் ளதாக நிதி அமைச்சர் மங்

பக்கம் 18 >>>

### நெடுந்தீவு, கிளிநொச்சியில்

## பனைவளத்தை மேம்படுத்த 40 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு



நெடுந்தீவு, கிளிநொச்சிப் பகுதி களில் பிரதேசங்களில் பனை வளத்தை மேம்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்துக்கு வழிவகை செய்யும்வகையில் வரவு – செலவுத் திட்டத்தில் 40 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பக்கம் 18 >>>

## அத்தியாவசியப் பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலை அறிவிப்பு



உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், பருப்பு, நெத்தலி, தேங்கா எண்ணெய் ஆகிய வற்றுக்கு அரசு கட்டுப்பாட்டு

பக்கம் 18 >>>

## ஓட்டோக்களுக்கு மீற்றர் கட்டாயம்



ஓட்டோக்களுக்கான கட்டுப் பாட்டு நிலையம் ஒன்று போக்கு வரத்து அமைச்சின் கீழ் அமைக் கப்படும் என நிதியமைச்சர் மங் கள சமரவீர கூறினார்.

இதன்கீழ் அனைத்து ஓட்டோக் களுக்கும்

பக்கம் 18 >>>

## மஹிந்த மீதும் மங்கள பாய்ச்சல்

போரை முடிவுக்குக் கொண்டுவந்த கடந்த ஆட் சியாளர்கள், தமிழ் மக்க ளின் மனங்களை வெல் லத் தவறிவிட்டனர்.

இவ்வாறு நேற்று வரவு – செலவுத்திட்ட உரையில்

பக்கம் 18 >>>

## காணாமற்போனோர் செயலகத்தை செயற்படுத்துவதற்கு ரூ. 140 கோடி



இலங்கையில் காணா மற்போனோர் பிரச்சினைக்குத் தீர்வாக அமையவுள்ள காணா மற்போனோர் அலுவலகத்தை செயற்படுத்துவதற்கு வரவு

பக்கம் 18 >>>

## 300 கோடி ரூபா செலவில் தொழில்நுட்பப் பல்கலை

இலங்கையில் இன் னும் ஐந்து வருடங்களில் தொழில்நுட்பப் பல்கலைக் கழகமொன்றை நிர் மாணிப்பதற்கு 300 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

பக்கம் 18 >>>

## ஐ.நா. அமைதிப்படைக்குச் செல்லும் இராணுவத்துக்கு 75 கோடி ரூபா நிதி



ஐ..நா. அமைதிப்படையில் பணியாற்றச் செல்லும் இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சிய ளிப்பதற்காக, வரவு – செலவுத்

பக்கம் 18 >>>

## சைக்கிளில் வந்தார் மஹிந்த!



2018 ஆம் ஆண்டுக் கான வரவு– செலவுத் திட்டம் நேற்று நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டது. இதில் பங்கேற்ப

பக்கம் 18 >>>

# கூட்டமைப்பிலிருந்து சுரேஷ் அணியினர் வெளியேறினால் மாற்று ஈ.பி.ஆர்.எல்.எவ் அணி உள்ளே!

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பில் பிரதான பங்கா ளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக்கட்சியுடன் முரண் பட்டுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். தரப்பினர், தேர்தலிலும் அரசியலி லும் தனிவழி போக முடிவெடுத் தால் – ஈ.பி.ஆர்.எல்.எவ். மாற்று அணியினரை கூட்டமைப் புக்குள் உள்வாங்குவது குறித்து தமிழரசுக் கட்சி யின் உயர்பீடம் ஆலோ சித்து வருகின்றது என அறிய வந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக் கம் இரண்டாகப் பிரிவ டைந்த போது அது சுரேஷ் பிறேமச்சந்திரன் தலை மையில் சுரேஷ் அணி என்றும், சுகு ஸ்ரீதரன் மற் றும் வடக்கு, கிழக்கு முன் னாள் முதலமைச்சர் வர

பக்கம் 18 >>>

# இம்முறையும் கல்விக்கே அதிகளவான நிதி ஒதுக்கீடு

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, நவ 10

நல்லாட்சி அரசு தனது அரச கொள்கையில் பிள்ளைகளின் கல்விக்கே அதிக முன்னுரிமை அளித்துள்ளதுடன் கடந்த வருடங்களைப் போன்றே இந்த வருட வரவு-செலவுத் திட்டத்திலும் கல்விக்கு அதிக நிதியை ஒதுக்கியுள்ளதென ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்தார்.



நேற்று முற்பகல் மொறட்டுவ பிரின்சஸ் ஒஃப் வேல்ஸ் வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் அதிகளவிலான கல்விமான்களையும் புத்திஜீவிகளையும் உருவாக்குவதே நாட்டின் எதிர்காலத்திற்கு முக்கியமானதாகும். கல்வி நடவடிக்கைகளில் எவ்வித குறைபாடுகளும் ஏற்படாதவாறு அனைத்து வளங்களையும் பெற்றுக்கொடுத்தல் அவசியமாகும்-என்றார்.

## கூச்சல் குழப்பத்தின் மத்தியில் பட்ஜெட்

வரவு-செலவுத் திட்ட அறிவிப்புக்காக நாடாளுமன்றம் நேற்றுக் கூடியபோது, ஆரம்பம் முதலே பரபரப்பான நிலை காணப்பட்டது.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில், சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

அப்போது, பெற்றோல் இல்லாமையால் சைக்கிளில் வந்த தம்மை நாடாளுமன்றுக்குள்வர அனுமதி மறுக்கப்பட்டமை தொடர்பில் மஹிந்தராஜபக்ஷ உட்பட எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

இது குறித்து, அவையின் உறுப்பினர்களிடையே கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

எனினும், நிதியமைச்சர் மங்கள சமரவீர வரவு-செலவுத் திட்ட உரையை ஆரம்பித்ததையடுத்து, கூச்சல்கள் ஓய்ந்து, நாடாளுமன்றம் அமைதியடைந்தது.

# இலங்கைக்கு கடத்தவிருந்த போதைப்பொருள் சிக்கியது

## நான்கு கோடி ரூபா பெறுமதியானது எனத் தமிழகப் பொலிஸார் தெரிவிப்பு

சென்னை, நவ 10

நான்கு கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருளை இலங்கைக்குக் கடத்தவிருந்த சந்தேக நபர் ஒருவர், சென்னை விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிட்

அந்த சந்தேகநபர், சென்னையில் இருந்து இலங்கைக்கு புறப்படவிருந்த விமானத்திலேயே இந்த போதைப் பொருளைக் கடத்த முற்பட்டுள்ளார்.

இந்தப் போதைப்பொருள் எந்த வகையைச் சேர்ந்தது எனத் தெளிவில்லாத காரணத்தால் அது குறித்த பரிசோதனைகள் தற்போது இடம்பெறுகின்றன எனத் தமிழகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர் தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது.

# கேப்பாபிலவு வீதியில் விபத்து; பலர் காயம்

முல்லைத்தீவு, நவ 10

புதுக்குடியிருப்பிலிருந்து கேப்பாபிலவு செல்லும் வீதியில் 10ஆம் வட்டாரப் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் பலர்காயமடைந்துள்ளனர்.



ஆடைத் தொழிற்சாலைக்குப் பெண்களை ஏற்றிச் சென்ற பஸ், எதிரே வந்த இராணுவ வாகனம் ஒன்றுக்குவழிவிடும்போது அருகிலிருந்த மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் பஸ்ஸில் சென்ற 20இற்கும்மேற்பட்ட பெண்கள் சிறு காயங்களுக்குள்ளான நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

விபத்துதொடர்பானமேலதிகவிசாரணைகளைப்புதுக்குடியிருப்புபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

# சுமந்திரனுக்குக் கொழும்பில் சுதந்திரம் கிடைக்கவில்லையா?

## கேட்கிறார் குமார வெல்கம எம்.பி.

கொழும்பு, நவ 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொழும்பில் சுதந்திரமாக வசிக்கவில்லையா? என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கேள்வி எழுப்பியுள்ளார்.

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பான விவாதம், ஐந்தாவது நாளாகவும் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை



வருமாறு:

புதிய அரசமைப்பின் ஊடாக நாடு பிளவுபடுவதை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இது குறித்து மகா சங்கத்தினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதிகாரத்தைக் கேட்கிறார்கள். சுமந்திரனை எடுத்துக்கொள்வோம், அவர் கொழும்பில் சுதந்திரமாக வசிக்கவில்லையா? எங்களைவிட அவருக்குச் சுதந்திரம் இருப்பதாகவே, நான் கருதுகிறேன்.

ஆனால், யாழ்ப்பாணத்திலும் அவர் வசிக்க விரும்புகின்றார். இந்த நாட்டில் அனைத்துத் தரப்பினரும் நாட்டின் எந்தப் பகுதியிலும் வசிக்கக் கூடிய சூழ்நிலை உருவாக வேண்டியது அவசியமாகும்-என்றார்.

# கீதாவுக்கான தடை; சபாநாயகர் விளக்கம்

கொழும்பு, நவ 10

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவுக்கு நாடாளுமன்றத்துக்குச் செல்ல முடியாத வகையில் சபாநாயகர் கரு ஜயசூரிய தடை விதித்திருக்கின்றார் என வெளியான செய்தியில்உண்மையில்லை எனச் சபாநாயகர் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீதா குமாரசிங்க சாதாரண பிரஜையாக நாடாளுமன்றத்துக்குச் செல்ல எந்தவித தடையும் இல்லை எனவும், எனினும், நாடாளுமன்ற உறுப்பினர்களின்வரப்பிரசாதங்களுடன் அவர் நாடாளு



மன்றத்துக்கு வருவதே தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் சபாநாயகர் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இரட்டைப் பிரஜாவுரிமை காரணமாக கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பறிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# விமல் சபைக்கு வரும்போது குண்டுச் சோதனை வேண்டும்

கொழும்பு, நவ 10

நாடாளுமன்றத்துக்குக் குண்டு வைக்க வேண்டும் எனக் கூறிய விமல் வீரவன்ஸ, நாடாளுமன்றுக்கு வரும்போது, தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் அமரசேன தெரிவித்தார்.

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பான விவாதம்,



நேற்றுமுன்தினமும் இடம்பெற்றது.

## ஐ.தே.கவின் துஷார இந்துனில் எம்.பி. கோரிக்கை

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

விமல் வீரவன்ஸ, நாடாளுமன்றத்துக்கு வரும்போது, முதலாவது வாயிற்கதவி லிருந்து நாடாளுமன்ற வாசல் வரை ஒவ்வொரு கதவுகளிலும் அவரை நிறுத்தி, தீவிர சோதனைக்கு உட்படுத்த வேண்டும். அவருடைய உடல், வாகனம், கோப்புகள் என அனைத்தும் சோதனைக்கு உட்படுத்தப் படவேண்டும். ஆகக் குறைந்தது, ஒரு மணித்தியாலமாவது அவர் மீது சோதனை நடத்த வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்-என்றார்.

# தொழிற்றுறை பட்ஜெட்டின் உள்ளடக்கம் இதுதான்

★ பெற்றோல் உள்ளிட்ட எரிபொருள் பயன்படுத்தும் வாகனங்களுக்கு பதிலாக ஹைபிரிட் வாகனங்களை அறிமுகப்படுத்த முன்மொழிவு. இதற்கமைய, ஹைபிரிட் வாகனங்களுக்கு வரிச் சலுகைகள் வழங்க யோசனை

★ மின்னியல் முச்சக்கரவண்டிகளைக் கொள்வனவு செய்வதற்கு ஊக்குவிக்கும் பொருட்டு, டீசல் முச்சக்கரவண்டிகளுக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்படும்.

★ ஆடம்பரக் கார்கள் மீது ஒரு சிறப்பு வரி விதிக்கப்படும்.

★ இயந்திரத் திறனைப் பொருத்து, வாகன இறக்குமதிகளுக்கான வரிகள், மீள்திருத்தம் செய்யப்படும்.

★ மின்சாரக் கார்களின் இறக்குமதி வரி குறைந்தபட்சம், 10 இலட்சம் ரூபா குறைக்கப்படும்

★ 2018 ஆண்டளவில் புத்தளம், யாழ். மட்டக்களப்பு, யாழ், நந்திக்கடல் போன்ற 10 களப்புகளைப் புனரமைக்க 100 இலட்சம் ரூபா ஒதுக்கீடு.

★ பொலன்னறுவை, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் விவசாயக் களஞ்சியசாலைகளை நிர்மாணிக்க யோசனை.

★ கடல்அட்டைகள் பிடிக்க, பாதுகாக்கக் கிளிநொச்சியில் – பூநரியில் விசேட நிலையம் அமைக்க ஏற்பாடு.

★ ஆழ்கடல் மீன்பிடிப்புக்காக 55 அடி நீளமான இழுவைப் படகுகளின் செலவு வீதத்தில், 50 வீதத்தை அரசு பொறுப்பேற்க உத்தேசம்.

★ மட்டக்களப்பில் நீர்வாழ் உயிரியல் பூங்காவுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க முன்மொழிவு.

★ பயிர் காப்பீட்டுத் திட்டத்துக்கு 300 கோடி ரூபா ஒதுக்க யோசனை.

★ சில கடன் தொடர்பான சலுகைகளை வழங்கவும் முன்மொழிவுகள்.

★ பெண்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வெற்றியடைய வட்டிச் சலுகை கடன்.

★ சுயதொழில் புரிவோருக்கான கடன் திட்டத்துக்கு, 50 கோடி ரூபா ஒதுக்கீடு.

★ விசேட தேவையுடைய நபர்களால் முன்னெடுக்கப்படும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக வரி நிவாரணம் வழங்கவும் முன்மொழிவு.

★ கறுவா போன்ற வாசனைத் திரவியங்களின் தரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை.

★ சிறுதோட்டத் தேயிலை உரிமையாளர்களை பாதுகாக்க 25 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்படும்.

★ 2025ஆம் ஆண்டளவில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை மூன்று மடங்காக அதிகரிக்கத் திட்டம்.

★ மாதுறுஓயா, கல்லோயா தேசிய சரணாலயங்களைப் புனரமைக்க உத்தேசம்.

★ கோட்டை, நானு – ஓயா மற்றும் எல்ல ஆகிய ரயில் நிலையங்கள், தொல்பொருள் இடங்களாகப் பிரகடனம் செய்ய யோசனை.

★ அனைத்துச் சுற்றுலாத்துறை சேவை வழங்குநர்களையும் இலங்கைச் சுற்றுலாத் துறைச் சபையின் கீழ் பதிவு செய்யுமாறு வலியுறுத்தல்.

★ அன்னாசி, வாழைப்பழத்தின் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு விசேட ஆராய்ச்சி நிலையம்.

★ தேசிய தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கான தேசத்தை கட்டியெழுப்பும் வரியை ஒரு வருடத்துக்கு நீக்க யோசனை.

★ பொலன்னறுவை, கிளிநொச்சி, இரத்தினபுரி ஆகிய பகுதிகளில் நெற்களஞ்சியசாலைகளின் நிர்மாணப் பணிகளை விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை.

★ மோட்டார் சைக்கில், கார் மற்றும் பஸ் தொடர்பில் காபன் வரியை அறிமுகப்படுத்த யோசனை.

★ எதிர்காலத் தொழிற்சந்தைக்கு ஏற்றவாறு பாடசாலை மாணவர்களைத் தயார்படுத்த பாட விதானத்தில் ரோபோ மற்றும் நனோ தொழில்நுட்பம் உள்ளிட்ட பாடநெறிகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

★ சுதேச வைத்திய பட்டப்பின் படிப்பிற்காக விசேட கற்கை நிறுவனம் அமைக்கப்படும்.

★ மகாபொல பெறும் பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

★ சப்ரகமுவ, மொறட்டுவ, வயம்ப பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடங்களை அமைக்க 125 கோடி ரூபா ஒதுக்கீடு.

★ சுவிற்சர்லாந்து, ஜேர்மன் ஒத்துழைப்புடன் புதிய ஐந்து தொழிற்பயிற்சி நிலையங்கள் பதுளை, கண்டி, திருகோணமலை, அனுராதபுரம் போன்ற பகுதிகளில் நிறுவ யோசனை.

★ யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தை அபிவிருத்தி செய்ய, தகவல் மத்திய நிலையம், பொது நூலகம் போன்றவற்றை நிறுவ 20 கோடி ரூபா ஒதுக்க யோசனை.

★ வடக்கு, கிழக்கு மக்களை மீள்குடியேற்ற வீடமைப்பு நடவடிக்கைகளுக்காக 300 கோடி ரூபா ஒதுக்க யோசனை.

★ சிவனொளிபாத மலை, முன்னேஸ்வரம், கோணேஸ்வரம், மடு உள்ளிட்ட புனிதத் தலங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை.

★ மண்சரிவு அபாயம் காரணமாக இரத்தினபுரி, வெலிமடை பகுதிகளில் உள்ள நீதிமன்றக் கட்டடங்களை வேறு இடங்களுக்கு மாற்ற நடவடிக்கை.

★ காணாமற்போனோர் அலுவலகத்தைச் செயற்படுத்துவதற்கு 140 கோடி ரூபா ஒதுக்க யோசனை.

★ கலைஞர்களுக்கான மருத்துவக் காப்பீடு வழங்க உத்தேசம்.

★ பழமை வாய்ந்த பொருளாதாரத்துடன் தொடர்புடைய சட்டங்களை மறுசீரமைக்க நடவடிக்கை.

★ வரி இன்றி விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான சப்பாத்துக்களை இறக்குமதி செய்ய உடன் நடவடிக்கை.

★ விளையாட்டு அக்கடமி, விளையாட்டுப் பயற்சி நிலையங்களை நிறுவ 150 கோடி ரூபா ஒதுக்கீடு.

★ திகண, பொலன்னறுவை, கல்முனை ஆகிய பகுதிகளிலுள்ள மைதானங்களை இரு வருடங்களில் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

★ வடக்கில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்காக வீடமைக்க 25 இலட்சம் ரூபா ஒதுக்கீடு.

★ 2018 ஏப்ரல் முதலாம் திகதி முதல் அனைத்து வங்கியூடான கொடுக்கல் வாங்கல்களின்போதும், 1000 ரூபாவிற்கு 20 சதம் விசேட வரி அறவிட நடவடிக்கை.

2018 ஏப்ரல் முதலாம் திகதி முதல் மதுபான இறக்குமதிக்கு தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி.

★ 2018ஆம் ஆண்டுக்குள் 1.9 டிரில்லியன் ரூபா கடன் செலுத்தப்படவேண்டும்.

★ குறுந்தகவல் மூலம் வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு வரி அறவிடப்படும்.

★ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் கடன் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளவர்களுக்கு, சிறிய வட்டியினாலான கடன் வசதிகள் வழங்குவதற்கு 100 கோடி ரூபா ஒதுக்கீடு.

★ நீதிமன்றங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு, நவீன பதிவு செய்யக்கூடிய வகையிலான இயந்திரங்களுடன் கூடிய வசதிகளுக்கு 90 கோடி ரூபா ஒதுக்கீடு.

★ மதுபானத்தின் மீது, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2018 ஏப்ரல் 1ஆம் முதல் அறவிப்படும்.

★ எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் நோய் அறிகுறிகளை, ஆரம்பகட்டத்தில் கண்டுபிடிப்பதற்கு, 10 கோடி ரூபா ஒதுக்கிடு,

★ குளிர்பானங்களில் சேர்க்கப்படும் ஒரு சதவீத சீனியின் அளவுக்கு 50 சதம் வரி நேற்று இரவிலிருந்து அமுலில்.

★ விலைமதிப்பற்ற கற்களை வெட்டுதல், மெருகேற்றி ஏற்றுமதி செய்வதற்கு இலங்கைக்குக் கொண்டுவரப்படும்போது, தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி விதிக்கப்பட மாட்டாது.

★ கழிவு முகாமைத்துவத்தை நிர்வகிக்க, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் உடனடியாக அமைக்கப்படும்.

★ வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகள் வைத்திருப்போரிடமிருந்து, அனைத்து விமானநிலையங்கள் மற்றும் துறைமுகங்களில், அறவிடப்படும் வரியை மீள பெறும் திட்டம் 2018 மே மாதம் 1ஆம் திகதி முதல், செயற்படுத்தப்படும்.

★ ஏற்றுமதி சந்தை அணுகல் திட்டத்துக்கு, 80 கோடி ரூபா ஒதுக்கீடு.

★ இறக்குமதி, ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி நிர்மாணிப்பதற்கு 10,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

★ இலங்கையின் ஒவ்வொரு நிர்வாகப் பகுதிகளிலும், பசுமை இலங்கை திட்டத்துக்குக் கீழ், ஓடு பாதைகள், நூலகம், தியானமையங்கள் போன்றவை அமைக்கப்படும்.

★ இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 50 இலத்திரனியல் பஸ்களை கொள்வனவு செய்வதற்கு, 50 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்படும்.

★ பாடசாலை மாணவர்களுக்கு தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சுகாதார காப்புறுதித் திட்டம் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்தப்படும்.

★ கிராமிய மட்டத்தில் 100 விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்ய 10 கோடி ரூபா ஒதுக்கீடு.

★ சுதேச மருத்துவத்துக்கான ஒரு பட்டப்படிப்பு நிறுவனம் நிறுவப்படும்.

# வீதியில் செல்லும் வாகனங்களுக்கு புதிய வரி அறிமுகம்

வீதியில் செல்லும் வாகனங்களுக்குப் புதிதாகக் காபன் வரி அறிமுகப்படுத்தப்படவுள்ளது. தனது வரவு – செலவுத் திட்ட உரையில் நிதியமைச்சர் இதனைக் கூறினார்.

புதிய வாகனங்களுக்கு, மோட்டார் சைக்கிள்களுக்கு 17 சதமும், காருக்கு 1 ரூபா 78 சதமும், பஸ்ஸுக்கு 2 ரூபா 72 சதமும் தினசரி வரியாக அறவிடப்படும்.

★ ★ ★ ★

# கைபேசிக் கட்டணம் உயர்வடைய வாய்ப்பு

நாடு முழுவதும் 50 ஆயிரம் கைத்தொலைபேசிக் கோபுரங்கள் உள்ளன. அவை தொடர்பில் மறுபரிசீலனை செய்யப்படும். இந்தக் கோபுரங்களூடாக மேற்கொள்ளப்படும் ஒரு நிமிட அழைப்புக்கு 2 ரூபா வரி அறவிடப்படும் என நிதியமைச்சர் நேற்று அறிவித்தார்.

★ ★ ★ ★

# சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கடன் வழங்க வங்கி

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதற்காக சிறப்பு வங்கி ஒன்றை அமைக்க 10 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் எங்கள் முதுகெலும்பு. தேவையான மூலதனத்தை நிறுவுவது கடினம். இது நிராகரிக்கப்படுவதற்குத் தேவையான கடன்களுக்கான வாய்ப்புகளைக் குறைப்பதற்கு நாம் பார்க்கிறோம். அவர்களுக்குக் கடன், வட்டிச் சலுகைகளை வழங்க 75 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என நிதியமைச்சர் சபையில் கூறினார்.

★ ★ ★ ★

# மின்சார ஓட்டோக்களுக்கு 90 சதவீத வரிக் குறைப்பு

இலத்திரனியல் ஓட்டோக்களுக்கு 90 வீத வரி விலக்கு வழங்கப்படும் என்று நிதியமைச்சர் மங்கள சமரவீர கூறினார்.

இலத்திரனியல் பஸ்கள் மற்றும் ஏனைய வாகனங்களுக்கும் இறக்குமதி வரிகள் தளர்த்தப்படும் என்பதுடன், இலத்திரனியல் வாகனங்களுக்கான வரி 10 இலட்சம் ரூபா வரை குறைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2040 ஆம் ஆண்டளவில் எரிபொருள் அல்லாத வாகனங்களை கொண்ட நாடாக, இலங்கையை மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சகல அரச வாகனங்களும் 2025ஆம் ஆண்டில் இலத்திரனியல் வாகனங்களுக்கு மாற்றப்படும்

சொகுசு வாகனங்கள் மீது 25 இலட்சம் ரூபா இறக்குமதி வரி விதிக்கப்படும். 2025ஆம் ஆண்டில் அனைத்து அரச வாகனங்களும் ஹைபிரிட் மற்றும் இலத்திரனியல் வாகனங்களாகும். வாகனங்களுக்கான மின் நிரப்பு நிலையங்கள் உருவாக்கப்படும்.

விபத்துக்களின்போது வாகனங்களில் செல்வோரைப் பாதுகாக்கும் 'எயார் பாக்' பொருத்தப்படாத வாகனங்கள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்படும். அத்துடன் டீசல் மூலம் இயங்கும் ஓட்டோக்களுக்கு 50,000 ரூபாவால் வரி அதிகரிக்கப்படும்.

தற்போது பாவனையில் உள்ள ஓட்டோக்களை பங்களாதேஸுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும் – என்றார் நிதியமைச்சர்.

### காசோலை மோசடி வழக்கில் ஆள்மாறாட்டம் செய்த

# குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரை எச்சரிக்கை செய்தது யாழ். நீதிமன்றம்

நீதிமன்ற கட்டளையை மதித்து ஒழுங்கான முறையில் விசாரணைகளை நடத்தாமையால் யாழ்ப்பாணம் சிறப்புக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவானால் நேற்றுக் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்.

25 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டு காசோலை வழங்கி மோசடி செய்தமை தொடர்பான வழக்கொன்று யாழ்ப்பாணம் சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தொடரப்பட்டிருந்தது. வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டவேளை முறைப்பாட்டாளர், வேறொரு நபரும் இணைந்தே இந்த மோசடியில் ஈடுபட்டார் என நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார். இதனையடுத்து குறித்த நபரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்து அவரையும் சந்தேகநபராக இணைத்து மன்றில் முற்படுத்துமாறு நீதிவான் கட்டளை இட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார், இந்த வழக்கில் நேற்று முன்தினம் கட்டளையிட்ட நபருக்குப் பதிலாக வேறொருவரை சந்தேகநபராக நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர். எனினும் அந்தச் சந்தர்ப்பத்தில் நேற்று நீதிமன்றால் ஒப்படைக்கப்பட்டவரும் நீதிமன்றில் இருந்தார்.

பொலிஸார் முற்படுத்தாத நபரிடமே தான் பணத்தை கொடுத்தார் என முறைப்பாட்டாளர் மன்றிடம் தெரிவித்தார். அதனையடுத்துச் சிறப்புக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரியையும் ஏனைய உத்தியோகத்தர்களையும் கடுமையாக எச்சரித்தார் மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன்.

பொலிஸார் பக்கச்சார்பின்றி, நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் சரியான முறையில் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். அல்லது அதற்கான பின்விளைவை எதிர்கொள்ள வேண்டும் எனவும் மேலதிக நீதிவான் கண்டித்தார்.

நமது பார்வை
உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## முதிர்ச்சியை நிரூபித்துவரும் முதலமைச்சர் விக்னேஸ்வரன்

தாம் ஒரு மூத்த - முதிர்ந்த - பக்குவமான அரசியல் தலைவர் என்பதை வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையோடு - குறிப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகிகளோடு - அண்மைக் காலமாகக் கொள்கை ரீதியாக முரண்பட்டு நின்றவர் அவர்.

அவருக்கு எதிராக, அவர்சார்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளிருந்தே நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரும் முயற்சிகளை இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் மேற்கொண்டிருந்தனர்.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையின் பேரில் அந்தப் பிணக்கு, பின்னர் இணக்கமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

ஆனால், அதன் பின்னரும் இலங்கைத் தமிழரசாருக்கும் அவருக்கும் இடையிலான கருத்து முரண்பாடு நிலைமை தீர்ந்ததாக இல்லை. அவருடன் முட்டி மோதாது விட்டாலும், முரண்பட்டு நிற்கும் சூழலே தொடர்ந்தது; தொடர்கின்றது.

இந்த வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு சாரார் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராகக் கொதித்தெழுந்து சீறும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

வேறு யாராவது மூன்றாம் தர அரசியல்வாதியாக இருந்திருந்தால் இந்தப் பிணக்கை - பிளவை - முரண்பாட்டை - தமக்குச் சாதகமாக்கி, குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கப் பார்த்திருப்பார்கள்.

அப்படித்தான் முதல்வர் நடந்து கொள்வார் எனப் பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், தாம் மூன்றாம் தர அரசியல்வாதி அல்லர், தாம் இனத்தின் மூத்த வழிகாட்டி என்பதை நிரூபித்திருக்கின்றார் முதல்வர் விக்னேஸ்வரன்.

2013 ஆம் ஆண்டில் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு வேட்பாளராக வர முன்னர், கொழும்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை நடத்திய தந்தை செல்வா நினைவுப் பேருரையில் தாம் என்ன சொன்னாரோ, அதனை முதல்வர் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

இவ்வாறு குழப்பங்கள் - சிக்கல்கள் - அரசியல் நெருக்கடிகள் போன்றவற்றை எதிர்கொண்ட பின்னரும் கூடத் தமது நிலைப்பாட்டை அவர் மாற்றிக் கொண்டார் அல்லர்.

ஆயுதப் போராட்டத்தின் முடிவில் தமிழருக்கு இனி என்ன பாதை எஞ்சியிருக்கின்றது என்பதுதான் அந்த நினைவுப் பேருரையின் தலைப்பின் அர்த்தம். 'தமிழர்கள் - செல்வது எங்கே?' - என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்திய நீதியரசர் விக்னேஸ்வரன், இனி ஐக்கியப்பட்டு நின்று - அஹிம்சை மார்க்கத்தில் - அறநெறியில் - உரிமைகளுக்காகப் போராடுவது ஒன்றே தமிழர்களுக்கு உள்ள ஒரே வழி என்று கூறியிருந்தார். - அது அவர் முதல்வராக முன்னர் கூறிய விடயம்.

அதையே கடந்த ஆண்டு 'காலைக்கதிர்' வெளியீட்டை ஒட்டிய 'விடியல் வீச்சு' நிகழ்விலும் அவர் கூறியிருந்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது வாக்களிப்பன்று "நேரத்துடன் வீட்டுக்கு வெளியே வந்து வாக்களியுங்கள்" என்று அவர் தமிழ் மக்களுக்கு விடுத்த அழைப்பை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டாம் என்ற அர்த்தத்திலேயே அவர் அப்படிக் கூறினார் என்று சீறினர் கூட்டமைப்பின் சில பிரகிருதிகள்.

அப்படிச் சீறியவர்களின் செயற்பாட்டால் - நடவடிக்கைகளால் - தமிழ்க் கூட்டமைப்பே பிளவுறும் என்ற ஆபத்து நிலை சூழ்ந்து வருகையில், 'தமிழ்க் கூட்டமைப்பின் ஒற்றுமை தேர்தலிலே வெளிப்படுத்தப்பட வேண்டும்' என்று பகிரங்கமாக அறிவித்து, தமிழர் ஐக்கியத்தை மீள ஒரு தடவை வலியுறுத்தி, அதன் மூலம் மேன்மையான தலைவராக உயர்ந்திருக்கின்றார் முதல்வர் விக்னேஸ்வரன்.

கூட்டமைப்பைப் பிளக்க முயல்வோர் தமிழ் மக்கள் பேரவையை அதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தவும், கூட்டமைப்பின் பிளவுக்குச் சாதகமாகத் தமிழ் மக்கள் பேரவையை இயங்க வைக்கவும் முயற்சிக்கின்றனர்.

ஆனால், "தமிழ் மக்கள் பேரவை அரசியலுக்குள் நுழையாது; அது மக்கள் இயக்கமாகவே இருக்கும்" - என உறுதிபட அறிவித்தமையின் மூலம், பிளவு நடவடிக்கைகளுக்குப் பேரவையைப் பயன்படுத்தத் திட்டமிட்ட தரப்புகளுக்கும் ஒரேயடியாக 'செக்' வைத்திருக்கின்றார் முதல்வர்.

ஒரு மூத்த - பழுத்த - அனுபவம்மிக்க - சரித்திரம் தெரிந்த, புரிந்த - தலைவர் என்ற முறையில், தமிழ் மக்கள் தொடர்பான விடயங்களில் தமது கருத்து நிலைப்பாட்டைப் பகிரங்கமாகக் கூறுகின்றமை தனது கடமை - பொறுப்பு - என முதல்வர் நினைக்கின்றார்.

அதை அவர் செய்ய வேண்டும். அது யாரைச் சுட்டாலும், யார் மனதை நோகடித்தாலும் அது பற்றி அலட்டிக் கொள்ளாமல் தமது அனுபவ அறிவுக்குப் பட்டவற்றைப் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கின்றமை அவரது கடமையாக இருக்கட்டும். அதை அங்கீகரிப்போம். அதுவே சரியானது. அதற்கு மேல் கூட்டமைப்பைப் பிளக்காமல் பார்த்துக் கொள்வதும் அவரது பொறுப்பு.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்துக் களமிறங்கும் ஈ.பி.டி.பி.



யாழ்ப்பாணம், நவ.10

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட மேலதிக நிர்வாகச் செயலாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் யாழ். மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளர் சிவகுரு பாலகிருஷ்ணன் ஆகியோர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மேலதிக நிர்வாகச் செயலாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் ஜனவரி மாதம் நடத்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனித்தே தனது வீணைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

கடந்த காலங்களில் எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மத்தியுடன் முன்னெடுத்துவந்த இணக்க அரசியலூடாக வடக்கு மாகாணம் மட்டுமல்லாது கிழக்கு மாகாணத்திலும் பல்வேறுபட்ட மக்கள் பணிகளைப் பல இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து முன்னெடுத்து நிறைவு செய்துகொடுத்திருந்தோம்.

அந்த வகையில், எமது கட்சி மக்களின் நலன்களைப் பாரபட்சமற்ற வகையில் முன்னிறுத்தியது. கட்சியின் நிலைப்பாடான மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பதன் பிரகாரம் நாம் எமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

தேர்தல் அறிவிக்கப்பட்டது போல குறித்த காலப்பகுதியில் நடத்தப்படவேண்டும் .

மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை மேற்கொள்ளும் முக்கிய பங்கை வகிக்கும் உள்ளூராட்சி மன்றங்கள் தற்போது செயலற்ற நிலையில் இருப்பதால் மக்களின் இயல்பு வாழ்வு அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, பிரதேசங்களின் அபிவிருத்திகளும் முடக்கப்பட்டுக் கிடக்கின்றன.

அந்தவகையில், உள்ளூராட்சித் தேர்தல், காலம் தாழ்த்தாது நடத்தப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். இதை எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்திலும் பல தடவைகள் வலியுறுத்தி வந்துள்ளார்.

மத்திய அரசுடன் இணக்க அரசியலை மேற்கொண்டு வந்த காலப்பகுதியில் எமது மக்கள் மழையால் பாதிக்கப்பட்டாலோ அன்றி வறட்சியால் பாதிக்கப்பட்டாலோ அல்லது வேறெந்த இடர்பாடுகளைச் சந்திக்க நேரிட்டாலோ அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள் உள்ளிட்ட அனைத்துத் தேவைப்பாடுகளையும் துரித கதியில் மேற்கொண்டு மக்களின் தேவைகளை நிறைவு செய்து கொடுத்திருந்தார்.

ஆனால், நாட்டில் தற்போது அமைந்துள்ளது எனக் கூறப்படும் நல்லாட்சி அரசுக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது நலன்களை முன்நிறுத்தியே அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்கின்றார்களே தவிர, மக்களின் அபிலாஷைகளை மட்டுமல்ல அடிப்படைத் தேவைகளையும்கூடப் புறந்தள்ளி வருகின்றனர்.

நாடாளுமன்றத்தில் 16 உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சி வரிசையிலிருந்து மத்திய அரசுக்கு முண்டுகொடுத்து வரும் இவ்வாறானவர்கள் தமிழ் மக்களுக்கு இதுவரை எத்தகைய நலன்களைப் பெற்றுக் கொடுத்துள்ளனர். எனவே, இவர்கள் விடயத்தில் மக்கள் விழிப்பாக இருப்பதே காலத்தின் தேவையாகும் - என்றார். (உ)

# வடக்கு, கிழக்கின் 5 மாவட்டங்கள் வறுமைப் பட்டியலில் முன்னிலை!

கொழும்பு, நவ.10

வடக்கு - கிழக்கில் உள்ள 5 மாவட்டங்களே வறுமையில் முதல் 5 இடங்களுக்குள் உள்ளன என மத்திய வங்கி வறுமை ஒழிப்புப் பிரிவின் குழுத் தலைவர் ஆர். ஸ்ரீபத்மநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு உள்ளிட்ட கிழக்கு மற்றும் வடமாகாணங்களில் இடம்பெறும் வறுமை ஒழிப்புச்செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் வடக்கு - கிழக்கில் உள்ள 5 மாவட்டங்கள் முன்னிலை இடங்களைப் பெற்று மிகக் கொடிய வறுமையான மாவட்டங்களாக இனங்காணப்பட்டிருக்கின்றன. இந்த விடயம் அனைவரினதும் கரிசனைக்கும் உள் வாங்கப்பட வேண்டும்.

இதுவரை வறுமைக்கோட்டுக்குள் இருந்த மொனராகலை மற்றும் மன்னார் மாவட்டங்கள் முன்னிலை இடங்களில் இருந்து விடுபட்டுள்ள அதே வேளை, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்கள் வறுமைப் பட்டியலுக்குள் உட்புகுந்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டம் கடந்த ஏழு வருடங்களாகத் தொடர்ந்தும் வறுமை நிலையில் முதலாவது,இரண்டாவது, மூன்றாவது என்ற தர வரிசையில் வறுமை மாவட்டமாக மாறி மாறி அந்த வட்டத்துக்குள்ளேயே சுழல்கிறது.

ஒக்ரோபர் மாத இறுதியில் புள்ளிவிவரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள விவரங்களின்படி கிளிநொச்சி மாவட்டம் 18.2 வீதம் வறுமையான இலங்கையின் முதலாவது மாவட்டமாகவும், முல்லைத்தீவு மாவட்டம் 12.7 வீத வறுமையுடன் இரண்டாவது மாவட்டமாகவும், 11.3 வீத வறுமையுடன் மட்டக்களப்பு மூன்றாவது மாவட்டமாகவும், 10.0 வீத வறுமையுடன் திருகோணமலை நான்காவது மாவட்டமாகவும், 07.7 வீத வறுமையுடன் யாழ்ப்பாணம் ஐந்தாவது வறுமை மாவட்டமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

சனத்தொகை அடிப்படையில் கிளிநொச்சியில் 21,249 பேரும், முல்லைத்தீவில் 12,003 பேரும், மட்டக்களப்பில் 60,912 பேரும், திருகோணமலையில் 39,718 பேரும், யாழ்ப்பாணத்தில் 46,052 பேரும் வறுமைக்குட்பட்டுள்ளனர் எனவும் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலே தான் வறுமை, நுண்கடன் தொல்லை, பாலியல் துஷ்பிரயோகம், போலி நாணயத்தாள்களின் புழக்கம் என்பன அதிகளவில் உள்ளன - என்றார். (உ)

**நாளை**

11.11.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : ஆயிலியம் பி.ப. 4.59 வரை
திதி : அஷ்டமி மு.இ. 6.40 வரை
சுபநேரம் : 3.06 – 4.36 வரை
இராகுகாலம்: 9.06 – 10.36 வரை

# வடக்கு – கிழக்கை இணைத்தால் மீண்டும் இரத்த ஆறுதான் ஓடும்!



**எச்சரிக்கின்றார் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா**

கொழும்பு, நவ.10

வடக்கு - கிழக்குஇணைப்பு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. வடக்கும் கிழக்கும் இணையும் பட்சத்தில் கிழக்கில் இரத்த ஆறே ஓடும். மீண்டும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படக் கூடாது. அதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதியளிக்கமாட்டோம். - என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் எச்சரிக்கை விடுத்தார்.

அரசமைப்புச் சபையில் அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை மீதான 5ஆம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தற்போதைய அரசமைப்பில் இருபதுக்கும் மேற்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளநிலையில் அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பைப் பெற்று புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது.

யுத்தம் நிறைவடைந்தாலும் இனப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. இந்த நாட்டில் சகல இனங்களும் தமது உரிமைகளை பெற்றுக்கொண்டு அன்னியோன்யமாக வாழும் சூழல் உருவாக்கப்பட வேண்டியுள்ளது.

இந்நிலையில், இந்த நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டு பிரதமர் நிர்வாக ஆட்சி முறைமையைக் கொண்டு வர வேண்டும் என்று முன்மொழியப்பட்டுள்ளது.

உண்மையிலேயே சிறுபான்மைச் சமூகங்களுக்கு உள்ள பாதுகாப்பு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையாகும். கடந்த காலங்களில் சிறுபான்மை மக்களின் வாக்குகளின் ஊடாகத்தான் ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட முடியும் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, முஸ்லிம் சமூகம் இந்த நாட்டின் ஜனாதிபதியாக ஒருவரைத் தெரிவு செய்வதற்கான ஆதரவை வழங்குகின்றபோது தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான வழியைப் பெற்றுக்கொள்கின்றார்கள்.

ஜனாதிபதி வேட்பாளருடன் நடைபெற்ற பேச்சுக்கள் ஊடாக முஸ்லிம் சமூகத்திற்கு விரோதமான சக்திகளை நாம் தோற்கடித்திருக்கின்றோம் என்பதைக் கண்கூடாகக் கண்டிருக்கின்றோம்.

தற்போதைய நிலையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன. அவ்வாறான நிலையில் தற்போது வழங்கப்பட்ட அதிகாரங்களுடன் கூடிய ஜனாதிபதி ஆட்சி முறைமையே தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவு காணப்படுகின்றது. வடக்கும் கிழக்கும் இணைந்திருக்கும் விடயத்தில் சில விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் 42 சதவீதமாக வாழ்கின்றார்கள். நாட்டிலே கிழக்கு மாகாணத்தில் மட்டுமே முஸ்லிம்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நாட்டின் வரலாற்றை எடுத்துப் பார்க்கையில் வடக்கும் கிழக்கும் இணைந்து இருந்தபோது இரத்த ஆறு ஓடியது. கிழக்கு மாகாணத்திலுள்ள மூவினங்களும் பிரிந்திருந்தன. தற்போது கிழக்கு மாகாணம் பிரிந்து தனியாக இருக்கின்றது.

கிழக்கு மாகாணம் தற்போது அமைதியாக இருக்கின்றது. கடந்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ்ச் சகோதரர், முஸ்லிம் சகோதரர் என மாறிமாறி முதலமைச்சராக இருந்துள்ளார்கள். மூன்று இனக்குழுவினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரவையொன்று காணப்பட்டது. இந்த விசேட தன்மை ஏனைய மாகாணங்களில் இல்லை. இவ்வாறு மூன்று இனங்களும் ஒற்றுமை யாக, அமைதியாக, சகோதரத்துவத்துடன் வாழும் மாகாணத்தை வடக்கு மாகாணத்துடன் இணைக்க வேண்டிய தன் அவசியம் என்ன?

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் ஜே.ஆர். ஜெயவர்த்தன இரவோடு இரவாக வடக்கையும் கிழக்கையும் இணைத்தார். அவ்வாறு நிர்வாகமுறை மாற் றப்பட்டபோது கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் சிறுபான்மையிலும் சிறுபான்மையாக மாற்றப்பட்டனர்.

ஆகவே, கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்களை சிறுபான்மையினராக்கும் வடக்கு, கிழக்கை இணைப்பதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடமளிக்க முடியாது. வடக்கும் கிழக்கும் தனித்தே இருக்க வேண்டும்.

வடக்குடன் கிழக்கு இணைந்திருந்ததாக வரலாறொன்று இல்லை. வடமத்திய மாகாணத்தை இணைத்து ஆட்சி நடத்தியமைக்கான வரலாறு இருக்கின்றது. எனவே, வடக்கை கிழக்குடன் இணைக்க வேண்டும் என்று கோருவதில் நியாயமில்லை. ஆகவே, வடக்கு, கிழக்கை மீண்டும் இணைத்து இனத்தைப் பாதித்து, இனமொன்றின் விகிதாசாரத்தைக் குறைத்து, இரத்த ஆறு ஓடுவதற்கு இடமளிக்க முடியாது. அவ்வாறானதொரு புதிய அரசமைப்பை உருவாக்க முடியாது. இந்த நாட்டில் உருவாக்கப்படும் புதிய அரசமைப்பின் மூலம் இனங்களின் உரிமைகளை பாதுகாத்துக்கொண்டு வாழ்வதற்கான சூழல் உருவாக்கப்படவேண்டும்.

தற்போதைய நிலையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எவராலும் தனித்து முதலமைச்சராகவோ அல்லது அமைச்சராகவோ இருக்க முடியும். அவ்வாறு மூவினம் இணைந்து ஆட்சி செய்து அமைதியாக வாழும் ஒரு மாகாணமாக கிழக்கு இருக்கையில் வடக்கும் கிழக்கும் இணைய வேண்டும் என்று கூறுபவர்கள் அதற்கான காரணம் என்னவென்பதை வெளிப்படுத்த வேண்டும்.

அதேநேரம் மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் உரியமுறையில் பகிரப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்கள் அமைச்சரவைத் தீர்மானங்கள், சுற்று நிருபங்களால் முடக்கப்பட்டுள்ளன. அவ்வாறு 13ஆவது திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பயன்படுத்தி மக்களுக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான வசதிகளை உள்ளடக்கிய வகையில் அதிகாரங்கள் வழங்க வேண்டும். ஆனால், மாகாண சபையாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

நாடாளுமன்றத் தேர்தல் முறைமையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று முன்மொழியப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் பொறுப்புக்கூறும் வகையிலான பிரதிநிதித்துவம் கொண்டுவர வேண்டும் என்பதற்காக எந்தத் தியாகங்களையும் செய்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால் முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை பாதிக்கின்ற முறைமைக்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

தற்போது 21 முஸ்லிம் பிரதிநிதிகள் காணப்படுகின்றனர். அவர்களை ஐந்து, ஆறு பிரதிநிதிகளாக குறைப்பதற்கு இடமளிக்க முடியாது. 10 சதவீதமான முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையிலான நாடாளுமன்றத் தேர்தல் முறைமையொன்றுக்கே நாம் முழுமையான ஆதரவளிப்போம் - என்றார். (உ)

## இடைக்கால அறிக்கை குறித்து மேலும் ஒரு நாளுக்கு விவாதம்

*வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் பின்னர்*

கொழும்பு,நவ.10

அரசமைப்புப் பேரவைக்கு முன் வைக்கப்பட்டுள்ள அரசமைப்பு நடவடிக்கைக் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கருத்துத் தெரிவிக்க வரவு செலவுத்திட்ட விவாதத்தின் பின்னரும் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே ஒதுக்கப்பட்ட மூன்று நாள்களுக்கு மேலதிகமாக மேலும் இரண்டு நாள்களை ஒதுக்க அண்மையில் சபாநாயகர் கரு ஜயசூரிய நடவடிக்கை மேற்கொண்டிருந்தார்.

எனினும், கடந்த திங்களன்று நடாளுமன்றத்தை ஒத்திவைக்கும் நேரத்திலும் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராக இருந்தனர்.

இதனைக் கருத்தில் கொண்ட சபாநாயகர் கரு ஜயசூரிய, பிரதமர் மற்றும் சபை முதல்வருடன் கலந்துரையாடி, வரவு- செலவுத்திட்ட விவாதத்தின் பின்னரும் அரசமைப்பு நடவடிக்கைக் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பில் கருத்துக்களை முன்வைக்க மேலும் ஒரு நாளை ஒதுக்க நடவடிக்கை எடுத்துள்ளார். (உ)

## சிவில் பாதுகாப்புப் படை வீரர் யானைத் தந்தத்துடன் கைது!

கொழும்பு,நவ.10

மிஹிந்தலை - மாத்தளை சந்திக்கு அருகில், யானைத் தந்தம் வைத்திருந்தார் எனக்கூறப்படும் சிவில் பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வசம் இருந்து 3 யானைத் தந்தங்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர், இராஜங்கனை - பஹலமாரகஹவெவ பகுதியைச் சேர்ந்தவர் என்பதோடு, கருவலகஸ்வெவ சிவில் பாதுகாப்புப் படையின் மாகாண அலுவலகத்தில் கடமையாற்றுபவர் எனவும் தெரியவந்துள்ளது.



சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(உ)

திருமலை பொது இடம் ஒன்றில்

# மது அருந்தியவருக்கு 5,000 ரூபா அபராதம்

திருகோணமலை,நவ.10

திருகோணமலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொது இடத்தில் மதுபானம் அருந்திய நபர் ஒருவருக்கு ஐந்தாயிரம் ரூபாய் தண்டப் பணம் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், தண்டப்பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் இரண்டு மாதங்கள் சிறைத் தண்டனை விதித்தும் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா-சின்னப்புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவருக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இந்த நபர் வவுனியாவிலிருந்து திருகோணமலைக்கு நண்பர் ஒருவரின் வீட்டிற்குச் சென்றிருந்தார்.

இந்த நிலையிலேயே, திருகோணமலையில் அமைந்து பொது இடமொன்றில் மதுபானம் அருந்திய நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லம் சிரமதானம்!





கஞ்சிகுடிச்சாறு, நவ.10

தேசிய மாவீரர் நாளை அனுஷ்டிக்கும் பொருட்டு அம்பாறை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லம் சிரமதானம் செய்யப்பட்டுள்ளது.

கஞ்சிக்குடிச்சாறுப் பிரதேசப் பொது மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட முதற்கட்டச் சிரமதானப் பணி நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது காஞ்சிரங்குடா, திருக்கோவில், கஞ்சிக்குடிச்சாறு மற்றும் தம்பிலுவில் ஆகிய பிரதேச மாவீரர் குடும்பங்களும் அவர்களின் உறவினர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் இரண்டாம் கட்டச் சிரமதானப் பணிகள் எதிர்வரும் நாள்களில் முன்னெடுக்கப்படும் எனப் பொதுமக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# மூன்று வருடங்களாக நிரப்பப்படாத 108 கிராமசேவகர் வெற்றிடங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக 108 கிராம சேவை உத்தியோகத்தரின் பதவி வெற்றிடங்கள் உள்ள நிலையில் மாவட்ட நிர்வாகம் இயங்கி வருகின்றது என ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் முருகுப்பிள்ளை கோமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகஅவர் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தம் 343 கிராம சேவகர்கடமைப் பிரிவுகள் உள்ளன. தற்போதைய மாவட்டத்தில் 235 கிராமசேவகர்கள் கடமையாற்றுகின்றனர்.

இதேவேளை, கிராம சேவகர்கள் இல்லாத 108 கிராமங்களில்கடந்த 3 வருடகாலத்தில் பதில் கடமை மூலமே அந்தந்தக் கிராமப் பிரிவுகளுக்கான



நிர்வாகச் சேவைகள் இடம்பெறுகின்றன.

கிராம சேவை அலுவலர்கள் தமது நியமனம் மற்றும் வயது அடிப்படையில் ஒரு தொகுதியாக நியமிக்கப்படுகின்றமையும் அதேபோல ஒரு தொகுதியாக ஒரே நேரத்தில் ஓய்வு பெற்றுச் செல்கின்றமையுமே இத்தகைய அதிகளவான வெற்றிடங்கள் நிலவுவதற்குக் காரணமாகும். வருடாவருடம் கிராம அலுவலர்கள் கிரமமாக நியமனம் செய்யப்படுவார்களாயின் கிராமங்களில் கிராம சேவை அலுவலர்களுக்கான நிர்வாக இடைவெளி ஏற்படாது. அத்துடன் கிராம அலுவலர்கள் வேலைப் பளுவின்றிக் கடமையாற்றுவதற்கும் வாய்ப்புக் கிட்டும்.

கிரமமான முறையில் கிராம உத்தியோகத்தர்களின் நியமனங்கள் இடம்பெறும் வகையில் நிர்வாக ஒழுங்குகள் இருக்குமாயின் இந்த அளவு வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிலவுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. ஒரு தொகுதியினர் ஓய்வு பெற்றுச்செல்லப் புதிதாக மற்றுமொரு தொகுதியினர் கடமைப் பொறுப்பில் இணைந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இலங்கை அரச நிர்வாகச் சக்கரத்திலே ஆரம்பப் புள்ளியிலும் அதேவேளை மிக முக்கியமான அடிப்படையான நிர்வாகக் கடமைக் கட்டமைப்பிலும் கிராமசேவகர்கள் உள்ளனர். அதனால் அரச நிர்வாக இயங்கியலுக்குக் கிராம சேவகர்களின் கடமை இருப்பு முக்கியமானது. தமக்கு ஒதுக்கப்பட்ட கிராமங்களில் கடமை செய்வதோடு கிராமசேவகர்கள் இல்லாத கிராமங்களில் பதில் கடமை செய்வதற்குரிய மேலதிகக் கொடுப்பனவுகள் பதில் கடமை புரியும் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படுகின்ற போதிலும் அது தமது அர்ப்பணிப்பான சேவைக்குப் போதாது என கிராமசேவகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

திருமலை மாவட்டம்

## தரமுயர்த்தப்பட்ட வைத்தியசாலைகள்



திருகோணமலை மாவட்டத்தில் B தரத்திலுள்ளமூதூர்தளவைத்தியசாலை மற்றும் கிண்ணியாத் தள வைத்தியசாலைகள் A தரத்திற்குத் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

இதனைக் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் தவிசாளரும், மத்தி சுகாதார பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளருமான சட்டத்தரணி எச்.எம். எம்.பாயிஸ் தெரிவித்துள்ளார்.

மத்திய சுகாதாரப் பிரதி அமைச்சர் பைசல் காசீம் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தின் போது A தரத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுளது.

இதேவேளை, மத்திய சுகாதார அமைச்சரின் செயலாளரின் கையொப்பமிடப்பட்ட இரண்டு வைத்தியசாலைகளினதும் தரமுயர்த்தல் தொடர்பான அத்தாட்சிக் கடிதத்தை பிரதி அமைச்சர் பைசல் காசீம், முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எச்.எம். எம்.பாயிஸிடம் வழங்கியுள்ளார்.

மேலும், கிழக்கு மாகாணத்திலுள்ள வாழைச்சேனை, மகிழடித்தீவு, தெகியத்தகன்டியா போன்ற வைத்தியசாலைகளும்தரமுயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ப)

## வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்றிட்டம்



கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மீள்குடியேற்றக் கிராமமான வடமுனைப்பகுதி மக்களின்வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன் தினம் மாலை இடம்பெற்றது.

கிராமியப் பொருளாதாரப் பிரதி அமைச்சர்எம்.எஸ்.எஸ். அமீர் அலியின் வழிகாட்டலில் வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

வறிய மக்களின் குடும்பங்களை முன் னேற்றும் வகையில் முப்பத்தைந்து குடும்பங்களுக்கு இதன்போது கோழிக் குஞ்சுகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதி அமைச்சரின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்புச் செயலாளர் ஜோன் லோகநாதன், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மாட்டினர் ஆட்டுத் திருடர்கள் காட்டிக்கொடுத்தது சீ.சீ.ரி.வி.

மட்டக்களப்புப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆடுகளை திருடிச் சென்ற குழுவினர் ஓட்டோவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு அமிர்தகழிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வளர்க்கப்பட்டு வந்த உயர் ரக ஆடுகள் இரண்டு நேற்றுமுன்தினம் திருட்டுப் போயின.

இது தொடர்பில் மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் சீ.சீ.ரி.வி கமரா காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அம்பாறை மாவட்டத்தின் சவளக்கடைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில்இருந்து ஓட்டோவும் ஆடுகளும் மீட்கப்பட்டன.

இது தொடர்பில் ஓட்டோவின்



சாரதி உட்பட சவளக்கடையை சேர்ந்த இருவரும், வெல்லாவெளியை சேர்ந்த ஒருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன எனவும் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் அவர்களை ஆஜர்படுத்தவுள்ளோம் எனவும் மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி டிஹா கவத்துற தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் சித்திரவதைக் குற்றச்சாட்டுகள்; விசாரணை நடத்துவதற்கு அரசு தயாராம்

கொழும்பு, நவ.10

இலங்கைத் தமிழர்கள் மீது தற்போதும் சித்திரவதைகள் இடம்பெறுகின்றன வெளியாகியுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகள் நடத்தப்படும் என்று இலங்கை வெளிவிவகார செயலர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.



இலங்கையில் தற்போதைய ஆட்சியில் சித்திரவதை செய்யப்பட்ட 52 தமிழர்களின் சாட்சியங்களுடன், அசோசியேட்டட் பிரஸ் ஆய்வு அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இலங்கையின் வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசம் -

எந்த வொரு சித்திரவதை நடவடிக்கையையும் இலங்கை அரசு வன்மையாகக் கண்டிக்கிறது.

நாட்டில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் சித்திரவதைகள் குறித்த குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை செய்யப்பட்டு, விடயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.

இந்த முயற்சிக்கு நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புகளின் ஒத்துழைப்பும் உதவிகளும் அவசியம். விசாரணைகளுக்கு ஆதாரங்கள் முக்கியம்.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் நல்லிணக்கம், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள் ஊக்குவிப்பு போன்றவற்றுக்கும், சித்திரவதைகளைத் தடுப்பதற்கும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கம் எந்த விதத்திலும் சித்திரவதைகளை ஏற்றுக்கொள்ளவோ அல்லது சகித்துக் கொள்ளவோ மாட்டாது.

சித்திரவதைகளை முற்றாக அகற்றுவதற்கும், இத்தகைய குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்கவும், இரு தரப்புப் பங்காளர்கள், அனைத்துலக அமைப்புகள், தமது அனுபவங்களையும் ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் இலங்கைக்கு வழங்கி உதவ வேண்டும் -என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)



## 'லங்கா ஈ நியூஸ்' இணையத் தளம் நேற்று முதல் இலங்கையில் தடை?

கொழும்பு,நவ.10

'லங்கா ஈ நியூஸ்' இணையத் தளம் இலங்கையில் நேற்று முதல் தடை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. நேற்று இந்த இணையத் தளத்தை இலங்கையில் பார்வையிட முடியாத நிலை காணப்பட்டது.

'லங்கா ஈ நியூஸ்' இணையத் தளத்தைப் பார்வையிட முடியாமல் முடக்குமாறு இலங்கையில் இணைய சேவையை வழங்கும் நிறுவனங்களுக்கு, தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைய அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்பாக சில கட்டுரைகளை வெளியிட்ட பின்னரே, இந்தத் தடை விதிக்கப்பட்டது என ஒரு செய்தி கூறுகிறது.

எனினும், இந்த இணையத் தளத்தை இலங்கையில் பார்வையிட முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டமைக்கான சரியான காரணம் உறுதிப்படுத்தப்படவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இலங்கையில் லங்கா ஈ நியூஸ் இணையத்தளம் சில ஆண்டுகளாகத் தடை செய்யப்பட்டிருந்தது.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களை அடுத்து, லங்கா ஈ நியூஸ் ஆசிரியர் சந்துருவன் சேனாதீர லண்டனில் புகலிடம் தேடியிருந்தார். (உ)

## இரத்தினபுரி, கேகாலையில் மண்சரிவு பற்றி எச்சரிக்கை

கொழும்பு,நவ.10

மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய இரு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை வரை 24 மணித்தியாலங்களில் 100 மில்லி மீற்றக்கு அதிகமாக மழைவீழ்ச்சி காணப்பட்டதால் மேலும் மழை தொடருமாயின் மண்சரிவு , பாறை விழுகை, நிலவெட்டு சாய்வு மற்றும் தரை உள்ளிறக்கம் என்பவை ஏற்படலாம் என எச்சரிக்கப்படுகிறது.

இதன் காரணமாக பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறத் தயார் நிலையில் இருக்குமாறும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியிலிருந்து நேற்று மாலை 6.30 மணிவரையில் இந்த மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இரத்தினபுரி மாவட்டத்தில் அயகம பிரதேச செயலக பிரிவும் சுற்றுப்புறங்களும் விசேடமாக, அயகம, மடபத்தர, கலத்துர, பிட்டகந்த, கவிச்சிகந்த, தவரகிரிய, கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் அலபாத்த பிரதேச செயலக பிரிவும் சுற்றுப்புறங்களும் எகலியகொட பிரதேச செயலக பிரிவும் சுற்றுப்புறங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட பிரதேசெயலக பிரிவும் சுற்றுப்புறங்களுக்கும் நேற்று மாலை வரையில் இந்த மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. (உ)

## இலங்கைக்கு ஜப்பானிடமிருந்து கொடையாக ரோந்துப் படகுகள்






ரோக்கியோ,நவ.10

இலங்கைக்கு ஜப்பான் வழங்கியுள்ள 30 எம் வகை ரோந்துப் படகு நேற்று இலங்கை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவால் இயக்கி வைக்கப்பட்டது. ரோக்கியோவில் உள்ள சுமிதகாவ கப்பல் கட்டும் தளத்தில் நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.

30 எம் வகை ரோந்துப் படகுகள் இரண்டை இலங்கைக்கு கொடை அடிப்படையில் வழங்க ஜப்பான் இணங்கியிருந்தது.

இதில் முதலாவது படகே நேற்று இலங்கைப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரால் இயக்கி வைக்கப்பட்டது.

இந்தப் படகுக்கு '501' என்ற இலக்கமிடப்பட்டுள்ளது. இது இலங்கைக் கடலோரக் காவல் படையின் பயன்பாட்டுக்காக வழங்கப்படும். இந்த இரு படகுகள், 27 கடல் மைல் வேகத்தில் பயணிக்கக் கூடியவையாகும். (உ)

## ‘இடைக்கால அறிக்கையும் தமிழ் மக்களும்’

# நல்லூரில் ஞாயிறன்று கருத்தாடல் அரங்கு

நல்லூர், நவ. 10

‘இடைக்கால அறிக்கையும் தமிழ் மக்களும்’ எனும் கருத்தாடல் அரங்கு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உரும்பிராய் வடக்கு கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் என்.இன்பம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறை தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம், சமூக அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன், அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ)

## தினசரி ராசி பலன் 10.11.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஐப்பசித் திங்கள் 25 ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஸப்தமித் திதி பகல் 2.50 மணிவரை. பின்னர் அஷ்டமி. நட்சத்திரம் பூசம் பகல் 12.25 மணிவரை. பின்னர் ஆயிலியம். மரணயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *பகல் 10.27 மணிமுதல் 11.54 மணிவரை.*

**சுபநேரம்** - *காலை 6.10 மணிமுதல் 7.40 மணிவரை.*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *ஐப்பசி மாத தேய்பிறை ஸப்தமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *பூசம்.*

### ‘ஜோதிடமணி’ பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** யோசனையான நாள். தனவரவு குறையும். தொழிற்பிரிவினர் சில சிக்கல்களைச் சந்திக்க நேரிடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலக விடயங்களில் இடையூறுகளும், இன்னல்களும் உண்டாகும்.

**ரிஷபம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமமாக இருக்கும். தொழிலில் வீண் அலைச்சல்களும் பாடுபட்டதன் பலன்களும் குறையும்.

**மிதுனம் :** யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். மாணவர்கள் வெளிநாடு சென்று கல்வி பயிலும் யோகம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகள் நன்மதிப்பைப் பெறுவதன் மூலம் பலன் அடைவர்.

**கடகம் :** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரம் சிறப்பாக நடைபெறும். மாணவர்கள் படிப்பிலும், போட்டி, பந்தயங்களிலும் வெற்றி பெறுவார்கள்.

**சிம்மம் :** கவலையான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். அரசின் உயர் பதவியில் இருப்பவர்களுக்குச் சோதனைகள் உண்டாகும். பிள்ளைகளால் கவலை உண்டாகும். தொழிலில் பிரயாசை கூடும்.

**கன்னி :** நன்மையான நாள். பணவரவு திருப்தியைத் தரும். உத்தியோகத்தர்கள் பாராட்டு, சிறிய உயர்வு போன்ற நற்பலன்களைப் பெறுவார்கள். தொழிற்பிரிவினர் முன்னேற்றம், வருவாயையும் பெறுவர்.

**துலாம் :** சம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்கள் சில சங்கடங்களைச் சந்திக்க நேரும். தொழிற்பிரிவினர் ஓரளவு முன்னேற்றத்தைக் காண்பார்கள்.

**விருச்சிகம் :** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். பெண்கள் குடும்ப நிர்வாகத்தில் மிகச் சிறப்பாக இயங்கி நற்பெயர் பெறுவார்கள். புத்திர வழியில் மகிழ்ச்சி உண்டாகும்.

**தனுசு:** துயரமான நாள். வருமானம் குறையும். உத்தியோகத்தர்களுக்கு விருப்பமில்லாத இடமாற்றம் கிடைக்கும். தொழிற்பிரிவினருக்கு வருமானம் மந்த நிலையில் காணப்படும். வியாபாரம் சுமாராக நடக்கும்.

**மகரம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வியாபாரம் தேக்கநிலையில் காணப்படும். தொழிலாளர் முயற்சியால் தொழில்வாய்ப்புகளைப் பெறுவார்கள்.


**கும்பம்:** மகிழ்ச்சியான நாள். வருமானம் வளமாக இருக்கும். மாணவர்கள் கல்வித் தேர்வில் சிறந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும்.

**மீனம் :** கீர்த்தியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெற்று பெற்றோர், ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவார்கள். கலைஞர்கள் பாராட்டைப் பெறுவார்கள்.

சந்திராட்டமநாள்: மூலம், பூராடம் முதலாம் பாதம், உத்தராடம் முதலாம் பாதம், ஆகிய நட்சத்திரங்களில் தோன்றியோர் இன்று சுபகருமங்கள் ஆரம்பிக்கின்றமையைத் தவிர்க்கவும்.

# அகில உலக அகண்ட பஜனை 24 மணிநேரம் சாயி நிலையத்தில்!

## சனி மாலை 6 மணிமுதல் ஞாயிறு மாலை 6 மணிவரை



யாழ்ப்பாணம், நவ. 10

உலகம் முழுவதும் அமைதியும் சாந்தியும் நிலவ வேண்டும் என்பதற்காக 185 நாடுகளிலுமுள்ள பல்லாயிரக் கணக்கான சாயி நிலையங்களில் ஒரே தினத்தில் 24 மணிநேர பஜனை நடைபெறுவதற்குப் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா சங்கல்பித்துள்ளார்.

அந்த வகையில் யாழ்ப்பாணம், சேர். பொன் இராமநாதன் வீதியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்திலும் நாளை சனிக்கிழமை மாலை 6 மணிமுதல் மறுநாள் ஞாயிறு மாலை 6 மணிவரை - தொடர்ச்சியாக 24 மணிநேரமும் - இந்த பஜனை இடம்பெறும்.

அனைவரும் இந்த அகண்ட பஜனையில் பங்குபற்றித் தெய்வீக எழுச்சியைப் பெறுக் கொள்ளுமாறு யாழ். சாயி நிலையத்தினர் அன்புடன் அழைக்கின்றனர்.

“நீங்கள் அகண்ட பஜனையில் பாடும் பொழுது நீங்கள் முழு உலகத்துக்குமாகப் பாடுகிறீர்கள். ஒவ்வொரு உயிர்களதும் நன்மைக்காகப் பாடுகிறீர்கள். எனவே, நீங்கள் ஒவ்வொருவரும் அகண்ட பஜனையில் கலந்து கொண்டு பாடவேண்டும்.” - என்ற ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அழைப்பையும் யாழ். நிலையத்தினர் நினைவூட்டுகின்றனர். (இ)

## மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், நவ. 10

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை -

**யாழ். பிரதேசத்தில்** - நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, வேலணைச் சந்தியிலிருந்து துறையூர் வரை, மடத்துவெளி, வல்லான், ஆலடிச் சந்தி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான், புங்குடுதீவு கடற்படை முகாம், பனைவள ஆராய்ச்சி நிலையம், கைதடி யுனைற்ரெட் மோட்டோர்ஸ், கைதடி வடமாகாண சபை அலுவலகம் -

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக -

**நாளை சனிக்கிழமை** காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை **யாழ் பிரதேசத்தில்** - வறாத்துப்பளை, புனிதநகர், திக்கிரி, கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, பருத்தித்துறை வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், 3 ஆம் குறுக்குத்தெரு பிரதேசம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை -

**கிளிநொச்சிப் பிரதேசத்தில்** - சிலாவத்தை, உடுப்பிக்குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டங்கேணி, கொக்கிளாய், கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை -

**வவுனியா பிரதேசத்தில்** - குருக்கள்புதுக்குளம், குருக்களூரர், பறையனாலங்குளம், நீலியாமோட்டை, வவுனியா நகரம், றம்பைக்குளம், சூசைப்பிள்ளையார்குளம், கொறவப்பொத்தானை வீதி, ரயில் நிலைய வீதி, பூங்கா வீதி, கண்டி வீதி (ஏ9 வீதி), 1 ஆம் மற்றும் 2 ஆம் குறுக்குத்தெரு, மதவுவைத்தகுளம், மூன்றுமுறிப்பு, தவசிக்குளம், குட்செட் றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம், ஈரப்பெரியகுளம், வேரகம, கற்குண்டமடு, அலுத்கம, அழகல்ல, பகல அழுத்வத்த, புபுதுகம, குருந்துப்பிட்டிய, பு-ஓயா படை முகாம், ஈரப்பெரியகுளம் படை முகாம், ஈரப்பெரியகுளம், கார்கில்ஸ் பூட் சிற்றி, மண்டெரின் ஆடைத்தொழிற்சாலை, Kowloom ஆடைத்தொழிற்சாலை, குளோப் அரிசி ஆலை, விமானப்படை இராணுவ முகாம், ஓவியா தங்கு விடுதி, ராணி அரிசி ஆலை, SVR அரிசி ஆலை, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், வவுனியா பொது வைத்தியசாலை -

ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார்.

## கற்றல் வள நிலைய திறப்பு விழா இன்று

வடமராட்சி, நவ. 10

பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலை கற்றல் வள நிலையத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை வளாகத்தில் அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் இடம் பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், வே.சிவயோகன், சி.அகிலதாஸ், ச.சுகிர்தன், க.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## கந்தபுராணம் விளக்கவுரை

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் கந்தபுராணம் வாராந்த விளக்கவுரை பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை இல. 700 பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள ஞானவேல் ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை ‘முருகப்பெருமானின் படையணியின் தோற்றம்’ என்ற தலைப்பில் விளக்கவுரை நடைபெற உள்ளது. ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பயன்பெறுமாறு சின்மயா மிஷன் அறிவித்துள்ளது. (இ)

# மானிப்பாயில் கலாசாரப் பெருவிழா

*யாழ்ப்பாணம், நவ. 10*


*யாழ்ப்பாணத்தில் வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் வலி. தெற்கு பிரதேச கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் கலாசாரப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை 2 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற உள்ளது.*

*வலி. தென் மேற்குப் பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவை கலாசார அதிகார சபைத் தலைவருமான யசோதா உதய குமார் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ரி.குணரத்தினம் (இலக்கியத்துறை), ஜெ. ஜேசுதாசன் (நாட்டுக் கூத்து), ஆ.பத்திரிநாத் (நாடகம்), க.அரசரட்ணம் (ஊடகம்), சி.கணேசலிங்கம் (சிற்பம்) ஆகியோருக்குக் கலை ஞாயிறு விருது வழங்கப்படவுள்ளது.* (இ)

**மரங்களை வளர்ப்போம், மனங்களை வளர்ப்போம்**

# ஜம்பு பழச்செய்கை

**அன்ரனி ஜெஸ்மன் கிரேசியன் மார்க்.**
பாடவிடய உத்தியோகத்தர்
மறுவயற் பயிர்,
பிரதிமாகாணவிவசாயப் பணிப்பாளர்
அலுவலகம், முல்லைத்தீவு.




பொதுவாக தமிழில் ஜம்பு என அறியப்படும் தாவரம் றோஸ்அப்பிள், மெழுகு அப்பிள் என வெவ்வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகின்றது. இது வெப்ப மண்டல மற்றும் இடைவெப்ப மண்டலத்துக்குரிய பயிர். தென்கிழக்கு ஆசியாவிற்குச் சொந்தமானது. இலங்கை, இந்தியா உட்பட உலகம் முழுவதும் பரவலாக வளர்க்கப்படுகின்றது. நான்கு வகையான இனங்கள் உள்ளன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் அதிகளவில் ஜாவாறோஸ் அப்பிள் இனங்கள் பயிரிடப்படுகின்றன.

**போசனை முக்கியத்துவம் :-**

அதிக அளவு விற்றமின் சி,பொட்டாசியம், மற்றும் கல்சியத்தைக் கொண்டுள்ளது.

**மருத்துவ குணம்:-**

உயர் நார்ச்சத்தை கொண்டிருப்பதனால் மலச்சிக்கலை தடுத்து செரிமானத்தைத் தூண்டும்.

மரப்பட்டையில் உள்ள அல்கலைட்டு சேர்வை நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தக் கூடியது.

ஈரல், சிறுநீரகத்தில் இருந்து நச்சுத்தன்மையை அகற்றுகின்றது.

கொலஸ்ரோலை கட்டுப்படுத்துவதன் மூலம் இதயநோய்களில் இருந்து பாதுகாக்கின்றது.

இதில் உள்ள விற்றமின் சி குறிப்பிட்ட வகையான புற்றுநோய்கள் ஏற்படுகின்றமையைத் தடுப்பதோடு உடலுக்கு நோய் எதிர்ப்புத்தன்மையை அதிகரிக்கின்றது.

ஒக்சிநேற்றம் மற்றும் உயர் பொட்டாசியம் இதயநோயைத் தடுக்கின்றது.



**இனப்பெருக்கம் :-**

பொதுவாக பதிய முறை மூலமாகவே இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. விதைகள் மூலமும் இனப்பெருக்கம் செய்யலாம்.

தண்டுத் துண்டம் மூலம்; வீடுகளில் இலகுவில் நாற்றுக்களை உற்பத்தி செய்யலாம். ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட தாவரங்களில் இருந்து பென்சில் தடிப்புள்ள ஓர் அடி நீளமான நடுகை துண்டங்கள் பெறப்பட்டு மேல்மண் : கூட் டெரு : மணல் மண் 1:1:1 என்னும் விகிதத்தில் கலந்து நிரப்பப்பட்ட பொதிகளில் நடுகை செய்து நிழலான இடத்தில் வைத்து பராமரிப்பதன் மூலம் தரமான நாற்றுக்களை உற்பத்தி செய்ய முடியும்.

**நடுகை:**

நடுகை குழியை 2மீற்றர் X 2மீற்றர் X 2மீற்றர் நீளம், அகலம், ஆழம் இருக்கத்தக்கவாறு தயார் செய்து அதனுள் மேல்மண், உக்கிய மாட்டெரு அல்லது கூட்டெரு 1:1 என்ற விகிதத்தில் கலந்து குழி நிரப்பப்பட்டு அதனுள் நடுகை செய்யவும். 7மீற்றர் X 5மீற்றர் நடுகை இடைவெளியில் ஓர் ஏக்கரில் 115 மரங்களை நடுகை செய்யமுடியும்.

**கத்தரித்தலும் பழக்கப்படுத்தலும்.**


12மீற்றர் தொடக்கம் 15 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. எனினும் கத்தரித்தல் மூலம் 4 மீற்றர் தொடக்கம் 5 மீற்றர் உயரத்துக்கு பேணுவதன் மூலம் அறுவடையை எளிதாக்கலாம்.

**அறுவடை:**


நட்டு மூன்று வருடங்களில் பழத்தைப் பெற்றுக்கொள்ளலாம், ஒரு மரத்தில் இருந்து சராசரியாக 600 தொடக்கம் 700 வரையிலான பழங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இப்பழத்தை நேரடியாகவும், வெவ்வேறு பழங்களுடன் பழக்கலவையாகவும் ;(Mix fruit salads)ஆக சாப்பிடலாம். ஜாம், ஜெலி செய்ய இயலாது. பழுத்த பழத்தை ஊறுகாய் செய்யப் பயன்படுத்தலாம்.

இத்தகைய சிறப்புமிக்க ஜம்பு மரத்தை நாமும் எமது வீடுகளில் நட்டு பலனைப் பெறுவோம்.


Syzygiumsamarangense
ஜாவாறோஸ் அப்பிள்


Syzygiummalaccense
மலாய்றோஸ் அப்பிள்


Syzygiumaqueum
நீர் தன்மையானறோஸ் அப்பிள்


Syzygiumjambos
றோஸ் அப்பிள்/ஜம்பு









கோப்பாய், தேசோதய சபையால் முதியோர் தின விழாவில் யாழ். மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் க.செவ்வேள் பரிசு வழங்கிக் கௌரவிக்கின்றார். (இ -19)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

344

**கொரிய தீபகற்ப நீர்நிலைகளில் தென் கொரிய கடற்படைக்கப்பல்கள் உடனான பெரிய அளவிலான கூட்டு பயிற்சிகளில் தற்போது அமெரிக்க கடற்படை ஈடு பட்டுள்ளது. USS ரொனால்ட் ரீகன் எனும் அணுஆயுத சக்திவாய்ந்த விமானந்தாங்கிக் கப்பல், அழிப்புக்கப்பல்கள் மற்றும் போர்க்கப்பல்களின் தாக்குதல் குழுக்கள் உடனான அதன் பங்கேற்பு உட்பட, 40 இற்கும் மேற்பட்ட போர்க் கப்பல்கள் இதில் பங்கேற்றுள்ளன. மேலும், USS Michigan மற்றும் USS Tucson ஆகிய இரண்டு அணுஆயுத சக்திவாய்ந்த நீர் மூழ்கிக் கப்பல்கள் தென் கொரிய பிராந்தியத்தில் சமீபத்தில் நிலைநிறுத்தப்பட்டிருந்தன.**



தொடர்ச்சியானதொரு கூட்டு இராணுவ பயிற்சிகளையும், ஆத்திரமூட்டல்களையும் கொண்டதாக சமீபத்தில் நடத்தப்பட்டுவரும் இந்த கடற்படை போர்ப் பயிற்சிகள் கொரிய தீபகற்பத்தின் மீதான பதற்றங்களை மிகவும் அதிகரிக்கச் செய்பவையாகவே உள்ளன. போர் தயாரிப்புகளுக்கான மற்றோர் அறிகுறியாக, மோதல் ஏற்படுமானால், தென் கொரியாவிலுள்ள அமெரிக்க இராணுவம், அமெரிக்கப் படைத்துறை சாராத பெரிய வெளியேற்றும் பயிற்சியை அடுத்த வாரம் மேற்கொள்ளும். இது போன்ற பயிற்சிகள் எல்லாம் ‘வழமையானவை’தான் என்று விவரிக்கப்பட்டு வருகின்ற போதிலும், நேரம் வரும்போது, அந்த நேரத்தில் ‘இராணுவத் தெரிவை’ பயன் படுத்துவதற்கு முன்பாக நேரத்தை வீணடிக்காமல் இருப்பதற்கு இவை அவசியமென ட்ரம்பும் அவரது உயர் மட்ட அதிகாரிகளும் அறிவித்துள்ளனர்.

அட்மிரல் ஹரிஸ் அண்மையில் தனது உரையில் பின்வருமாறு அறிவித்தார்: ஒரு மூர்க்கமான தலைவரான கிம் ஜோங் இன் கையில் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைக் கொண்ட அணுஆயுதங்கள் உள்ளதென்பது பேரழிவுக்கான ஒரு செய்முறையாகவே உள்ளது.

உண்மையில், உலகின் மிகப் பெரிய மற்றும் மிகவும் அதிநவீன அணு ஆயுதப் படைகளத்தைக் கட்டுப்படுத்தும் மற்றும் வட கொரியாவை ‘ஒட்டுமொத்தமாக அழிக்க’ அச்சுறுத்தும் ட்ரம்பிற்கே இவ்வாறு கூறப்படும் விளக்கங்களும், ஓர் அபாயகரமானவர் என்பதும் பொருந்தக்கூடியவையாகும்.

அமெரிக்க மற்றும் அதன் நட்பு நாடுகளின் உடனடி இராணுவ தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டிவரும் என்பதை நம்புவதற்கும், அதற்கேற்ப போருக்கு தயாராவதற்கும் பியோங்யாங் தலைமை அனைத்துக் காரணங்களையும் கொண்டுள்ளது. அண்மையில், ஐ.நாவுக்கான வட கொரிய துணை தூதர், கிம் இன் ரியோங், அணுஆயுதப் போர் ‘எந்த நேரத்திலும் வெடிக்கக்கூடும்’ என எச்சரித்தமையோடு, அமெரிக்க நட்பு நாடுகள் பழிவாங்கும் நடவடிக்கையை தவிர்க்க விரும்பினால் போரில் பங்கேற்க வேண்டாம் எனவும் வலியுறுத்தினார்.

**ஐக்கிய நாடுகள் அணு ஆயுத ஒழிப்புக் குழுவிடம் கிம், அமெரிக்காவிடம் இருந்து ‘இத்தகையதொரு தீவிர மற்றும் நேரடியான அணுஆயுத அச்சுறுத் தலுக்கு’ உள்ளான ஒரே நாடாக எங்களது நாடு தான் உள்ளது என்றும், மேலும் இந்த அச்சுறுத்தல் அகற்றப் படாவிட்டால் மட்டுமே தனது அணுஆயுதங்களை பேச்சு மேசையில் வைக்கும் எனவும் தெரிவித்தார். மேலும், ‘எங்களது உயர் தலைமைத்துவத்தை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ள இரகசிய நடவடிக்கையை’ செயற்படுத்த முயற்சிக்கின்றது என அமெரிக்க அரசையும் அவர் குற்றஞ்சாட்டினார்.**

OPLAN 5015 இன் கீழ் வட கொரிய தலைவர்களை படுகொலை செய்ய அமெரிக்கா மற்றும் தென் கொரியா மூலமாக அமைக்கப்பட்டுள்ள ’முக்கிய தலைவர்களைக் கொல்லும் குழுக்கள்’ தொடர்பானதாகவே கடைசி கருத்து உள்ளது. தென் கொரிய ஊடகம், இத்தகைய குழுக்கள் கூட்டு கடற்படை பயிற்சிகளில் பங்கேற்றுக் கொண்டிருக்கும் USS Michigan போர்க்கப்பலில் இடம் பெறும் எனத் தெரிவித்தது.



வட கொரியா அதன் அணுஆயுத மற்றும் ஏவுகணைத் திட்டங்களை கைவிடக் கோரும் அமெரிக்க கோரிக்கைகளுக்கு அடிபணிய அதனை வலியுறுத்தி அதன் மீது இன்னும் மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை திணிக்க ரஷ்யா மற்றும் சீனா மீதான அழுத்தத்தை ஹரிஸும் அதிகரித்தார். நிலக்கரி, இரும்பு தாது மற்றும் பிற கனிமங்கள் உள்ளிட்ட வட கொரிய முக்கிய ஏற்றுமதிகளை தடை செய்யும் மற்றும் பியோங்யாங்கிற்கான பெற்றோலிய பொருள்கள் விற்பனையை மட்டுப்படுத்தும் வகையில் கடுமையான அபராதங்களை விதிக்கும் சமீபத்திய ஐ.நா.தீர்மானங்களை ஏற்கனவே பெய்ஜிங்கும், மொஸ்கோவும் ஒப்புக் கொண்டுள்ளன.

மிக அண்மையில் வெளியிடப்பட்ட சமீபத்திய சீன வர்த்தக புள்ளி விவரங்கள், ஏழாவது தொடர்ச்சியான மாதாந்திர வீழ்ச்சியாக செப்ரெம்பரில் வட கொரியாவிலிருந்து செய்யப்படும் இறக்குமதிகளில் 37.9 சதவிகித வீழ்ச்சியையும், மேலும் வட கொரியாவுக்கான சீன ஏற்றுமதிகளில் 6.7 சதவிகித இழப்பையும் காட்டுகிறது. திங்களன்று, ரஷ்யா, துத்தநாகம், வெள்ளி, தாமிரம் மற்றும் நிக்கல் போன்ற வட கொரிய இறக்குமதிகளைத் தடை செய்துள்ளதையும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதையும், மேலும் ஹெலிகொப்டர் மற்றும் கப்பல்கள் ஏற்றுமதியை தடை செய்துள்ளதையும் உறுதிப்படுத்தியது.

இருந்த போதிலும், உலகமும் சரி, இந்தப் பிராந்தியமும் சரி சீனா இன்னும் செய்ய வேண்டியுள்ளதென எதிர்பார்க்கின்றன என ஹரிஸ் அறிவித்தார். மேலும் அவர், ‘ஏனைய நாடுகளை விட பியோங்யாங் மீது மிகுந்த செல்வாக்கை பெய்ஜிங் கொண்டிருக்கின்ற’ நிலையில் வட கொரிய வர்த்தகம் சீனாவைச் சார்ந்திருப்பது, கொரிய தீபகற்பத்தை அமைதியாக வெளிக் கொணருவதற்கு சீனாவை முக்கியமாக்குகிறது’ எனத் தெரிவித்தார்.

இவ்விடயத்தில், ரஷ்யா உதவிகரமாக இருக்குமா அல்லது எதிர்க்குமா என்பது குறித்து பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டுமென ஹரிஸ் தெரிவித்தார்.



(கேள்வி தொடரும்)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 01



# உன்னைச் சரணடைந்தேன்

## இலக்கியம் நோக்கிய எனது பயணம்

உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. எனது இலக்கியப் பயணம் சுவாரஸ்யமானது. பிறந்தது செட்டிகுளத்தில், பின் புசல்லாவையில் வாழ்க்கை. அங்கு மூன்றாம் வகுப்புவரை சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் படிப்பு. சிலாபத்தில் சென். அன்ரனீஸ் பாடசாலையில் ஏழாம் வகுப்புவரை படிப்பு. யாழ். இந்துக் கல்லூரியில் எட்டாம் வகுப்பில் வந்துசேர்ந்தேன். என் தாயாரின் ஊரான சண்டிலிப்பாயில் இருப்புத் தொடர்ந்தது. செட்டிகுளம் முல்லை நிலம், புசல்லாவை குறிஞ்சி நிலம், சிலாபம் நெய்தல் நிலம், சண்டிலிப்பாய் மருத நிலம். நானிலத்திலும் தோய்த்து இறைவன் என்னை வளர்த்தெடுத்தான்.

### அண்ணன் எனது முதல் குரு

எங்கள் வீட்டில் நான்தான் கடைசிப்பிள்ளை. பதினொரு ஆண்டுகளாக அந்தப் பதவியைத் தக்கவைத்தேன். 1968 ஆம் ஆண்டு என் தங்கை பிறந்தாள். அத்தோடு, 'கடைசிப் பிள்ளை' எனும் பட்டம் என் கைவிட்டுப் போயிற்று. கடைசிப்பிள்ளையாய் இருந்தமையால், புசல்லாவையில் என் அக்காமாரும், அண்ணனும் பள்ளிக்கூடம் போய்விட, நான் மட்டும் வீட்டில் இருப்பேன். எங்கள் தந்தை அந்தக் காலத்தில் வந்த இந்திய சஞ்சிகைகளான, கல்கி, விகடன், குமுதம் ஆகியனவற்றை வாங்கி வருவார். வீட்டில் நிற்கும் நான், அவற்றை என் வயப்படுத்திவிடுவேன். அப்போது எனக்கு வாசிக்கத் தெரியாது. பாடசாலையால் வந்ததும் அக்காமாரும், அண்ணனும் அந்தச் சஞ்சிகைகளை என்னிடம் பெறப் போட்டிபோடுவர். ''யார் எனக்குச் சத்தமாய் வாசித்துக் காட்டுவீர்களோ, அவர்களுக்குத்தான் அவற்றைத் தருவேன்.'' என்று நிபந்தனை விதிப்பேன். என் அண்ணன் என் நிபந்தனைகளுக்கு உட்படுவார். அவர் கட்டிலில் படுத்திருந்து சஞ்சிகைகளை வாசிக்க, அவருக்கு அருகில் படுத்திருந்து அனைத்தையும் கேட்பேன். அதனால் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டிய விதத்தில், ஒருவகையில் என் அண்ணனும் எனக்குக் குருவாகிறார். இன்றும் என்னை யாரும் குறை சொன்னால் அவர் தாங்கமாட்டார். கேட்காத எனது பேச்சைக் கூடக் கற்பனையில் ரசிப்பார். இன்றைக்கும் அவர்தான் எனது முதல் ரசிகர். அவர் மூலம்தான் எனது வாசிப்புப் பழக்கம் ஆரம்பமாகியது.

இன்று இளையோருக்கு வாசிப்புப் பழக்கம் இல்லை எனும் படியாய் ஆகிவிட்டது. பெற்றோர்கள் படிப்பு முயற்சிகளை அதிகரிக்கிறோம் எனக் கூறி, பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தைச் சாகடித்து விட்டனர். அவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை எப்படி உண்டாக்குவது என, ஒரு குறிப்புத் தருவதற்காகவும் இந்தச் செய்தியைப் பதிவு செய்கிறேன்.

### ராஜாஜி தந்த விருப்பு

புசல்லாவை, சிலாபம் எனப் பின் தங்கிய பகுதிகளில் அதற்கு முன் படித்ததால், ஆற்றல்மிக்க யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களோடு சமப்பட முடியாமல், மிகவும் சிரமப்பட்டேன். படிப்பில் மிக மிகச் சுமாரான மாணவன் நான். வேறு எந்தத் துறையிலும் ஈடுபாடு இல்லாத காரணத்தால், எனக்கு நண்பர்கள் என்று அப்போது யாரும் இருந்தாரிலர். அந்தச் சூழ்நிலையில், யாழ். இந்துக் கல்லூரி நூலகமே எனது 'வேடந்தாங்கலாயிற்று'. பால பருவத்தில் கல்கி சஞ்சிகையில் படித்த, ராஜாஜியின் 'சக்கரவர்த்தித் திருமகன்' ராம காதை ஒரு சுவாரஸ்யத்தை ஏற்படுத்தியிருந்தது. அதை அடிப்படையாகக் கொண்டு, நூலகத்தில் இருந்த, அத்தனை இராமாயண ஆய்வு நூல்களையும் வாசித்தேன். பேச்சாளன் ஆக வேண்டும் எனும் எண்ணம், அப்பொழுது எனக்குக் கிஞ்சித்தும் இருக்கவில்லை. அதற்கான காரணமும் இருந்தது. அதைச் சொல்கிறேன்.

### எனது முதல் மேடைப் பேச்சு

சிலாபத்தில் நான் ஏழாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். அப்பாவின் 'ஓவசியர்' செல்வாக்கு பாடசாலையிலும் பதிவாகியிருந்தது. அங்கிருந்த சுமாரான மாணவர்கள் மத்தியில், நானும் ஓரளவு தெரியப்பட்டிருந்தேன். அதனால், பாடசாலையில் நடைபெற்ற ஒரு பேச்சுப் போட்டிக்கு, எனது பெயரையும் ஆசிரியர்கள் கொடுத்திருந்தார்கள். அப்போது எனக்கு அந்தப் போட்டி பற்றி அக்கறை இருக்கவில்லை. பாடமாக்கிப் பேசும் பேச்சு அது. பாடமாக்குவது என் மனதில் அப்போது நிற்கவே நிற்காது. பேச்சுப் போட்டி அன்று, நடுவர்கள், போட்டியாளர்களை ஒவ்வொருவராக மேடையேற்றினர். என் முறை வந்தது. நானும் மேடையேறினேன். ''பாரதியார் எட்டயபுரத்தில் பிறந்தார்.'' இந்த ஒரு வரியை ஒருவாறு முக்கித்தக்கிச் சொல்லி முடித்தேன். அந்த அளவில் நான் பாடமாக்கிய அத்தனையும் மறந்து போயிற்று. நடுவர்கள் எவ்வளவோ என்னை ஊக்குவிக்க முயற்சித்தனர். ஒரு சொல்லுத்தானும் வர மறுத்தது. இறுதியில் மேடையிலிருந்து இறக்கி அனுப்பப்பட்டேன். இதுதான் எனது முதல் பேச்சு அனுபவம். இந்த அனுபவம் இருக்க, பேச்சாளன் ஆக வேண்டும் எனும் எண்ணம் எப்படி எனக்கு வரும்?

### கம்பனில் ஆர்வம் வந்தது

மீண்டும் யாழ். இந்து வாழ்க்கை பற்றித் தொடர்கிறேன். வெறுமனே பொழுது போகவென வாசிக்கத் தொடங்கி, ஓரிரு ஆண்டுகளில் நூலகத்தில் இருந்த, தமிழ், சமய நூல்கள் முழுவதையும் வாசித்து முடித்திருந்தேன். வயதுக்கு மிஞ்சிய வாசிப்பு அது. அப்போது அதன் பெறுமதி எனக்குத் தெரியவில்லை. எனது குடும்பத்தார், ஆசிரியர்கள் என வேறு யாருக்கும் கூடத் தெரியவில்லை. பின்னாளில் என் தாயாரின் ஊரில் இருந்த, எங்கள் குல தெய்வமான ஐயனாரின் அருள் வாய்க்க, பேசும் ஆற்றல் வாய்த்தது. அந்தத் தெய்வம் எனக்குச் செய்த கருணையும், அது தந்த வாழ்வு உண்டாக்கிய அறிவுத் தெளிவும் பற்றிச் சொல்வதானால், அதற்குத் தனியே ஒரு நூல் எழுத வேண்டும். 'மற்றொன்று விரித்தல்' எனும் குற்றம் வருமென அஞ்சி விடுகிறேன். அங்ஙனமாய் நான் படித்த, இராமாயண ஆய்வுநூல்கள் ஏற்படுத்திய ஆர்வம், வானொலி ஊடாகக் கேட்ட, என் குருநாதர் பேராசிரியர் இராதாகிருஷ்ணனின், இராமாயணச் சொற்பொழிவுகள் ஏற்படுத்திய பெருவிருப்பு, இவையெல்லாம் தமிழிலும், கம்பனிலும் மேன்மேலும் ஆர்வத்தை ஏற்படுத்தின.

### பரீட்சையில் பட்டபாடு

அதுவரை சிற்றூர்களில் கற்றுவந்த எனக்கு, இந்துக் கல்லூரிச் சூழல் பெரும் வியப்பைத் தந்தது. கல்லூரியின் எல்லா அசைவுகளையும் என் ஆழ்மனதில் பதிவு செய்தேன். அந்தப் பதிவுகளே இன்றைய எனது ஆளுமையின் அத்திபாரம். ஏனோ அங்கு கல்வியில் மட்டும் என்னால் சோபிக்க முடியவில்லை. தட்டுத்தடுமாறி 'ஓ.எல்.' வகுப்பு வரை (பத்தாம் வகுப்பு) நகர்ந்தேன். 'ஓ.எல்.' இல் அந்த நகர்வு தற்காலிகமாகத் தடைப்பட்டது. முதல் தரம் நான்கு பாடங்கள் சித்தி, இரண்டாந் தரம் ஆறு பாடங்கள் சித்தி, 'ஏ.எல்.' படிக்க (பிளஸ் – II) அந்தப் பெறுபேறுகள் போதவில்லை. இரண்டாந் தரத்துடன் கல்லூரியை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று.

### கூலி வேலை செய்தேன்

வீட்டில் அப்போது சற்றுப் பொருளாதார நெருக்கடி. நான், சின்னக்கா, அண்ணன் என மூவரும் படித்துக் கொண்டிருந்தோம். வீட்டின் நிலைமையை உணர்ந்தாலும் படிப்பில் மனம் பதியாதமையாலும், நான் வேலைக்குப் போகவேண்டும் எனப் பிடிவாதம் பிடித்தேன். வீட்டிலும் கஷ்டம் இருந்ததால், என்னை வேலைக்கு அனுப்புவதாய் முடிவு செய்தார்கள். அப்பா நெடுஞ்சாலைத் திணைக்களத்தில் 'ஓவசியராய்' பணியாற்றினார். அவர் செல்வாக்கால் அதே திணைக்களத்தின் வட்டுக் கோட்டை 'டிப்போவில்' வேலைக்குச் சேர்க்கப்பட்டேன். சாதாரண, றோட்டுப் போடும் கூலியாள் வேலை. 'ஓவசியரின்' மகன் என்றமையால் வேலை செய்யத்தேவையில்லை. ஆனால், வீதியில் போய் வேலையாள்களுடன் நிற்கவேண்டும். மேலதிகாரிகள் வந்தால் மண்வெட்டியைப் பிடித்து வேலை செய்யுமாற்போல பாவனை செய்ய வேண்டும். என் இயல்பான உள நிமிர்வால், கூலியாளாய் நடிக்கும் போதெல்லாம் என் உயிர் போயிற்று. மாதம் நூற்றியெண்பது ரூபா சம்பளம். வேலைத்தளத்தில் பலரும் என்னை அவமரியாதை செய்தனர். வீதியில் போய்வரும் மாணவர்களை ஏக்கமாய்ப் பார்க்கத் தொடங்கினேன். கல்வியின் அருமையை அப்போதுதான் தெரிந்து கொண்டேன்.

தொடரும்...

காலைக்கதிர் Kalaikkathir


# ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் செயற்குழுக் கூட்டம் புதனன்று வவுனியாவில்

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் வவுனியா கோயில் குளத்தில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை முற்பகல் 11மணியளவில் ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிவரையில் நடைபெற்றது.

இதில் நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல், அரசமைப்பு சம்பந்தமான விவகாரங்கள் மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் தற்போது இருக்கக் கூடிய பிரச்சினைகள் என்பன தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

கட்சியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன்அரசமைப்புதொடர்பிலான இப்போதைய நிலைமைகளையும், இடைக்கால அறிக்கையும் அதற்கு இருக்கின்ற எதிர்ப்புக்களையும் பற்றி விளக்கிக் கூறினார். அத்துடன் வரக்கூடிய அரசமைப்பு வரைபு தமிழ் மக்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்குமென்று நம்பவில்லை, இருந்தாலும் இறுதி அறிக்கை வரும்வரை பொறுமை காக்க வேண்டும், இந்த விடயத்தில் நாங்களாகவே உடைத்துக் கொண்டு செல்கிறோம் என இருந்துவிடக் கூடாது என்றும் தெரிவித்தார்.





ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் நிலைப்பாடுகள் பற்றி கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டபோது பதிலளித்த சித்தார்த்தன், அது ஒரு சுயாதீனமான கட்சி, அந்தக் கட்சி சம்பந்தமாக விரும்பிய முடிவை எடுப்பது அவர்களுடைய விருப்பம். இருந்தாலும் கூட்டமைப்பில் இருந்து ஒரு கட்சி விலகுவதென்பது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கோ தமிழ் மக்களுக்கோ நல்லதல்ல. ஆகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் பேசி ஒரு நல்ல முடிவை எடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்று அவரைக் கேட்டுக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்தார்.

அத்துடன் உள்ளூராட்சித் தேர்தலிலே தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டதோடு, தொகுதி பங்கீடுகள், ஆசனப்பங்கீடுகள், தவிசாளர் நியமனங்கள் என்பன தொடர்பில் மூன்று கட்சிகளும் கூடி ஆராய்ந்து ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(இ-7)



வட மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மினின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நுண் கடன் வழங்கும் நிகழ்வில், யாழ். முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி மையத்தின் உறுப்பினர்களுக்கு கடன் வழங்கப்பட்ட போது... (இ-19)










யாழ் குடாநாட்டில் சில நாள்கள் தொடர்ச்சியாக பெய்த அடைமழையால் யாழ், கொய்யாத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த பாற்குளம் நிரம்பி வழிவதால் அயலில் உள்ள குடும்பங்கள் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருகின்றன. சில நாள்களுக்கு தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக குளக்கட்டிற்கு மேலால் வெள்ளம் பாய்ந்ததால் அயலில் உள்ள வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றன. (இ)



மன்னார் கல்வி வலயத்திலுள்ள தலைமன்னார் பியர் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் இவ் வருடம் (2017) மூன்று மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர். முகமட் ஹம்தூன் முகமட் ஹசீம் (172), வஹாப்தீன் பாத்திமா றிப்கா (154), இலங்கேஸ்வரன் ஷடார்மி (153) இவர்கள் பாடசாலை அதிபர் NI.சகாயநாதன் லியோன், ஆசிரியை எம்.என்.சித்தி சாபியா ஆகியோருடன் காணப்படுகின்றனர். (இ-112)

# கூட்டமைப்பின் ஐக்கியத்தை வலுவிழக்கச் செய்வது மக்கள் எமக்கு அளித்த ஆணையை மீறும் நடவடிக்கை

## ரெலோ விந்தன் கனகரத்தினம்





கொழும்பு, நவ.10

உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை அவசியமானது. அது எந்த வகையிலும் பிளவுபட்டுப் போகக்கூடாது என்பதில் நாம் உறுதியாகப் பணியாற்ற வேண்டும். அது சவாலாக எம் முன் உள்ளது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

புங்குடுதீடு மக்கள் ஒன்றியத்தின் அழைப்பில் புலம் பெயர்ந்த தமிழ் மக்களைச் சந்திப்பதற்காக ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருந்த சமயம், புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளை சிக்கல் நிலைமைக்குக் கொண்டு செல்லாது பேசித் தீர்ப்பது காலத்தின் கட்டாயம் ஆகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் வெற்றிகளுக்காக உருவாக்கப்பட்டதல்ல. மாறாக அது தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை ஜனநாயக வழிமுறைகளுக்குள்ளாகவும் விழுமியங்களுக்குள்ளாகவும் மேற்கொண்டு விடுதலைக்கு வலுச்சேர்ப்பதற்காகவே உருவாக்கப்பட்டது.

ஆயுதப்போராட்டம் வலுவிழந்த பின்னர் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு



தமது ஆணையைப் பல சந்தர்ப்பங்களில் வழங்கியுள்ளனர். அச்சுறுத்தல்கள், நெருக்கடிகளுக்கு மத்தியில் மக்கள் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்காக வாக்களித்துள்ளனர். மக்கள் தம்மிடம் நிலவும் அக வேற்றுமைகள் எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு தமது விடுதலைக்காக ஒரு குடையின் கீழ் செயற்படத்தக்க அரசியல் அங்கீகாரத்தையே கூட்டமைப்பிற்கு வழங்கினர்.

இவ்வாறு மக்கள் அளித்த ஆணை நமக்கும் சில படிப்பினைகளை வழங்குகின்றது. நமக்குள் பலதரப்பட்ட பிரச்சினைகள் காணப்பட்டாலும் அவற்றைக் கூட்டமைப்பை பிளவுபடுத்தாத வகையான அணுகுமுறைகளை முன்னெடுத்துத் தீர்ப்பதற்கு முயல வேண்டும் என்பதும் அப்படிப்பினைகளில் ஒன்றாகும்.

முரண்பாடுகள் மற்றும்



கருத்து வேற்றுமைகள், அரசியல் தீர்வை அணுகுவதில் மென்போக்கு, வன்போக்கு உத்திகள் கூட்டமைப்பிற்குள் காணப்படலாம். நாம் வெவ்வேறு தளங்களில் இருந்து அரசியலுக்குள் பிரவேசித்தவர்கள் என்ற வகையில் நமக்குள் அணுகுமுறைகளில், சிந்தனைகளில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றமை மறுக்க முடியாததாகும். அவ்வாறு காணப்படும் கருத்து வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு மோதல் நிலைக்குச் செல்லாது. கூட்டமைப்பினுள் அக ரீதியிலான ஜனநாயக போக்குகளை உத்திகளுடன் மேம்படுத்துவதன் வாயிலாக தீர்ப்பதற்கு நாம் விழைவோமாயின், அது வரவேற்கத்தக்கது.

நமது அணுகுமுறைகள் கூட்டமைப்பைப் பிளவு படுத்துவனவாக அமையக் கூடாது. அடிப்படையில் கூட்டமைப்பிற்கு வெளியில் நிற்கும் நியாயபூர்வமான சக்திகளையும் இணைத்துக்கொண்டு பயணிப்பதாக கூட்டமைப்பு பலப்படுத்தப்பட்டால் அது மக்களின் அரசியல் எதிர்பார்ப்பைச்சிதறடிக்காது மேலும் முன் நோக்கிச் செல்ல உதவும்.

குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவதில் புலம்பெயர் அமைப்புக்களுக்கும் மக்களுக்கும் பெரும் பொறுப்புள்ளது. நீங்கள் விருப்பு, வெறுப்புக்களைக் கடந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இறுக்கமான கட்டமைப்பாகப் பேணுவதில் செல்வாக்குச் செலுத்த வேண்டும்.

தாயகத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் ஏகோபித்த தெரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவதன் வாயிலாக தமிழ் மக்களின் தலைமைத்துவங்கள் சிதறிப்போகாது மக்களின் பிரச்சினைகளை தீர்க்கமுடியும். ஏற்கனவே தாயகத்தில் இருக்கின்ற மக்களுக்கு அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் நீங்கள் நல்கும் ஒத்துழைப்பு பெரியது என்பதை என்றும் நினைவில் கொள்கின்றோம்.

இந்த இடத்தில் நான் பெரிது நீ பெரிது எனக் கொள்ளாது நாடு பெரிது என்ற மகோன்னத தத்துவத்தை நாம் நினைவுறுத்த வேண்டியுள்ளது. தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பன மறுக்கப்பட முடியாத, நிராகரிக்கப்பட முடியாத கோரிக்கைகளாகும். அக் கோரிக்கைகளை வலுப்படுத்துவதற்கு எம்மிடையான ஐக்கியம் இன்றியமையாதது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. - இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

இக்கூட்டங்களில், வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்துடன் இணைந்து ரெலோவின் பிரான்ஸ் கிளை அமைப்பாளர் நித்தி, ஜேர்மன் கிளை அமைப்பாளர் ரஞ்சித் உட்பட ரெலோவின் சர்வதேசக்கிளைகளின் முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(உ)

# போதை மாத்திரை விற்ற வைத்தியரின் மகன் கைது

ஓட்டமாவடி,நவ.10

ஓட்டமாவடியில் நீண்ட நாள்களாக தேடப்பட்டு வந்த போதை மாத்திரை வியாபாரியை வாழைச்சேனைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

வாழைச்சேனை குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரி.மேனன் தலைமையிலான குழுவினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டபோது, ஓட்டமாவடி பிரதேசத்தில் மிக நீண்ட நாள்களாக போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த வைத்தியர் ஒருவரின் மகனிடம் இருந்து 120 போதை மாத்திரைகள் மற்றும் எட்டு கிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளமையுடன், அவரும் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையப்



பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறான சட்டவிரோத சம்பவங்களைத் தடுக்கும் வகையில் விசேட பொலிஸ் குழுவினர் இரவு பகலாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரி.மேனன் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(உ)

காலைக்கதிர்
Kalaikkathir



## தமிழகத்தில் போயஸ் கார்டன் முதல் கோடநாடு வரை :

# 'ஒப்பரேஷன் கிளீன் மணி'! அதிர்ந்தது தமிழகம்!!





தமிழகத்தில் நேற்று போயஸ் கார்டன் முதல் கோடநாடு வரை தினகரன், சசிகலா தொடர்புடைய அனைத்துப் பகுதிகளிலும் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று அதிரடி கறுப்புப் பணவேட்டையை ('ஒப்பரேஷன்கிளீன் மணி') நடத்தினர். இதனால் சென்னை நகரத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

ஜெயலலிதா மரணம் அடைந்த பிறகு அவரது தோழி சசிகலா, அ.தி.மு.க.வை முழுமையாகத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து முதலமைச்சராக ஆட்சியில் அமரும் முயற்சிகளில் ஈடுபட்டார். முதல் கட்டமாக அ.தி.மு.க. பொதுச்செயலாளராகிய அவருக்கு, அடுத்தடுத்து முட்டுக்கட்டைகள் விழுந்தன. இந்த நிலையில் சொத்துக்குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் தண்டனை பெற்றுச் சிறை செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதால், அவரது அரசியல் செயற்பாடுகள் முடங்கின.

அ.தி.மு.க.வை தனது குடும்பத்தின் பிடியில் இருந்து நழுவ விட்டு விடக்கூடாது என்று நினைத்த அவர் தனது உறவினரான தினகரனை அ.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளராக நியமித்தார். இதையடுத்து அ.தி.மு.க.வை முழுமையாகக் கைப்பற்றத் தினகரன் முயன்றார். ஆனால் அவரது முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கவில்லை. இதனால் எடப்பாடி பழனிசாமியின் அ.தி.மு.க. ஆட்சியை கவிழ்க்கும் நடவடிக்கைகளில் தினகரன் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிலையில் சசிகலா, தினகரன், நடராஜன், திவாகரன் மற்றும் அவர்களது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரையும் அதிர்ச்சியில் மூழ்கச் செய்யும் அதிரடி நடவடிக்கையை வருமான வரித்துறை எடுத்தது. நேற்று அதிகாலை முதல் அவர்கள் அனைவரது வீடுகளிலும் வருமான வரிச் சோதனை வேட்டை நடந்தது. தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரா, புதுச்சேரி ஆகிய 5 மாநிலங்களில் மொத்தம் 187 இடங்களில் இந்தச் சோதனை நடந்தது.

தமிழ்நாட்டில் மட்டும் 105 இடங்களில் சோதனை நடந்தது. சென்னையில் அடையாறில் உள்ள தினகரன் வீடு, ஈக்காடுதாங்கலில் உள்ள ஜெயா டி.வி. அலுவலகம், போயஸ்கார்டனில் உள்ள ஜெயா டி.வி.யின் பழைய அலுவலகம், ஈக்காடு தாங்கலில் உள்ள நமது எம்.ஜி.ஆர். பத்திரிகை அலுவலகம், வேளச்சேரியில் உள்ள ஜாஸ் அலுவலகம், தியாகராய நகரில் உள்ள இளவரசி மகள் டாக்டர் கிருஷ்ணப்பிரியா வீடு, நுங்கம்பாக்கத்தில் உள்ள இளவரசி மகன் விவேக் வீடு, பெசன்ட் நகரில் உள்ள நடராஜன் வீடு, படப்பையில் உள்ள மிடாஸ் மதுபான ஆலை உட்படப் பல இடங்களில் அதிரடிச் சோதனை நடத்தப்பட்டது.

வருமான வரித்துறை அதிகாரிகள் சிறு, சிறு குழுக்களாகப் பிரிந்து இந்தச் சோதனையில் ஈடுபட்டனர். சசிகலா, தினகரன், நடராஜன், திவாகரன் குடும்பத்தினர் தாங்கள் நடத்தும் நிறுவனங்களில் வரி ஏய்ப்பு செய்துள்ளனர் என எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து இந்தச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சசிகலா, தினகரன் குடும்பத்தினர், உறவினர்களுக்கு சொந்தமாக 10இற்கும் மேற்பட்ட தொழில் குழுமங்கள் உள்ளன. இந்தத் தொழில் குழுமங்கள் மூலம் ஏராளமான போலி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு வரி ஏய்ப்பு செய்யப்பட்டுள்ளது எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாகவே வரி ஏய்ப்பை முழுமையாக கண்டு பிடிக்க 187 இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் முற்றுகையிட்டுள்ளனர்.

அதிகாலை 5.30 மணிக்கு அதிகாரிகள் இந்த அதிரடிச் சோதனையை ஆரம்பித்தனர். ஒப்பரேஷன் கிளீன் மணி (கருப்புப் பணம் ஒழிப்பு) என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த அதிரடிச் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தச் சோதனைக்காகத் தென் மாவட்டங்களில் இருந்து அதிக அளவில் வருமான வரித்துறையினர் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சொத்துக் குவிப்பு வழக்கில் சிக்கிச் சிறைத் தண்டனையை அனுபவித்து வரும் சசிகலாவுக்கு இந்த வருமான வரித்துறைச் சோதனை மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

## மோடியை சந்தித்தார் பிரிட்டன் இளவரசர்



இரண்டு நாள்கள் அரசுமுறைச் சுற்றுப்பயணமாக இந்தியா வந்துள்ள பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் மற்றும் அவரது மனைவி கமீலா ஆகியோர் பிரதமர் மோடியை நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் மற்றும் கமீலா தம்பதியினர் சிங்கப்பூர், மலேசியா, இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கு 11 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர். அதன் ஒரு பகுதியாக இரண்டு நாள்கள் பயணமாக நேற்று இந்தியாவுக்குச் சென்றுள்ளனர்.

டில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் மற்றும் கமீலா தம்பதியினரை வெளியுறவுத் துறை இணையமைச்சர் வி.கே.சிங் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதனையடுத்து, நேற்று மாலை பிரதமர் மோடியை அரச தம்பதியினர் சந்தித்தனர். அப்போது, பிரிட்டன் ராணி எலிசபெத் உடல்நிலை தொடர்பாக மோடி கேட்டறிந்தார். மேலும், சில முக்கிய விவகாரங்கள் தொடர்பாகப் பேச்சு நடைபெற்றது.

இன்று ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தை அரச தம்பதியினர் சந்திக்க உள்ளனர். அப்போது, அரசதம்பதியினருக்கு ஜனாதிபதி விருந்தளிக்க உள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## யுனெஸ்கோ பட்டியலில் சென்னை: மோடி வாழ்த்து

புதுடில்லி,நவ.10

இசைத்துறையில் சிறந்த படைப்பாக்க நகரங்களின் பட்டியலில் சென்னையை யுனெஸ்கோ அமைப்பு தேர்வு செய்துள்ளமைக்குப் பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இசைத்துறையில் சிறந்த படைப்பாக்க நகரங்களை யுனெஸ்கோ அமைப்பு பட்டியலிட்டுள்ளது. இதில், இந்தியாவிலிருந்து சென்னை, ஜெய்ப்பூர் மற்றும் வாரணாசி ஆகிய நகரங்களும் படைப்பாக்க நகரங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி, டுவிட்டரில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். சென்னை மக்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையின் பாரம்பரிய இசைக் கலாசாரம் காரணமாக இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது. நமது வழமைமிக்க கலாசாரத்தில் சென்னையின் பங்களிப்பு விலை மதிப்பு இல்லாதது. இந்தியாவுக்கு இது பெருமைமிகு தருணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## பண மதிப்பு நீக்கம் 38 வீதம் வெற்றி

### கருத்துக் கணிப்பில் தகவல்

புதுடில்லி, நவ.10

பண மதிப்பு நீக்க நடவடிக்கை தொடர்பாக பத்திரிகை ஒன்லைன் மூலம்எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பில் 38 வீதம் வெற்றி பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் திகதி 500, 1,000 ரூபா நோட்டுகள் செல்லா எனப் பிரதமர் மோடி அறிவித்தார். இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு நேற்றுமுன்தினத்துடன் ஓராண்டு காலம் நிறைவடைந்தது. இதனையடுத்து 'Economic Times' பத்திரிகை ஒன்லைன் மூலம் இது தொடர்பான கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்தியது. இதில் 10 ஆயிரம் பேர் பங்கேற்று வாக்களித்தனர்.

அதில் ஒட்டுமொத்தமாகப் பண மதிப்பு நீக்க நடவடிக்கையை எப்படி பார்க்கிறீர்கள்? என்ற கேள்விக்கு 38 வீதம் பேர் இந்தத் திட்டம் வெற்றி அடைந்துள்ளது என்று கூறினர். 30 வீதம் பேர் தோல்வி கண்டுவிட்டது எனக் கூறினர். 32 வீதத்தினர் இரண்டும் கலந்து ஏற்பட்டு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர்.

பண மதிப்பு நீக்க நடவடிக்கை நாட்டின் பொருளாதாரத்தில் நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என 26 வீதம் பேர் தெரிவித்துள்ளனர். 32 வீதத்தினர் இதன் காரணமாகப் பொருளாதாரத்தில் வெளிப்படைத் தன்மை ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர். 42 வீதம் பேர் சில பாதிப்புகளை ஏற்படுத்தி இருந்தாலும் அதிகமான வெளிப்படைத் தன்மை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

# பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த எலியின் பல் கண்டெடுப்பு



லண்டன்,நவ.10

இங்கிலாந்து போர்ட்ஸ் மவுத் பல்கலைக்கழக மாணவர் 14 கோடியே 5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த எலியின் பல்லைக் கண்டுபிடித்துள்ளார்.

இங்கிலாந்தில் உள்ள போர்ட்ஸ் மவுத் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர் கிராண்ட் ஸ்மித். இவர் தென்மேற்கு இங்கிலாந்தில் உள்ள 'டோர்செட்'' கடற்கரையில் பாறைகளுக்கு இடையே கூர்மை யான 2 பற்களைக் கண்டெடுத்தார். அவை எலி போன்று வளைக்குள் (பொந்துகளுக்குள்) வாழும் உயிரினத்துக்குரியது.

அந்த பல் மிகவும் கூர்மையாக உள்ளது. அதே நேரத்தில் உணவுப் பொருள்களைத் துண்டாக்கி அதை மென்று சாப்பிடும் வகையில் உள்ளது. எலியின் பல்லுடன் ஒத்துப் போகிறது.

அந்தப் பற்களுக்குரிய உயிரினம் சுமார் 14 கோடி (14 கோடியே 5 லட்சம் ) ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து இருக்கலாம் என ஆராய்ச்சியாளர் ஸ்டீவ் சுவீட்மேன் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த உயிரினம் பாலூட்டி வகையைச் சேர்ந்தது. டைனோசரின் தொடக்க நிலைவகை மிருகமான டியூரிஸ்டோடான் என்சோமி மற்றும் டியூரிஸ்டோதெரியம் நியூமனி ஆகியவற்றில் ஏதாவது ஒருவகையைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

(ப)

## வைத்தியர் தகுதித் தேர்வில் ரோபோ அதிக மதிப்பெண்



சீனாவில் நடைபெற்ற வைத்தியருக்கானதகுதித் தேர்வில் மனிதர்களுடன் கலந்துகொண்ட ரோபோ வெற்றி பெற்றுள்ளது.

சீனாவில் கடந்த ஓகஸ்ட் மாதம் வைத்திய ருக்கான தகுதித் தேர்வு நடந்தது. அதில் 5 லட் சத்து 30 ஆயிரம் பேர் கலந்து கொண்டு தேர்வு எழுதினார்கள்.

அவர்களில் ஒரு 'ரோபோ'வும் (எந்திரமனிதனும்) தேர்வு எழுதியது. இதைச் சீனாவின் தொழில்நுட்ப நிறுவனமான ஐபிளை டெக் மற்றும் டிசின்டுவா பல்கலைக்கழகமும் இணைந்து உருவாகியுள்ளன.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. அதில் 'ரோபோ' வைத்தியருக்கான தகுதித் தேர்வில் அதிக மதிப் பெண் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் ட்ரம்ப்:



# 900 கோடி டொலர் மதிப்பிலான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின

பீஜிங்,நவ.10

ஆசிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அமெ ரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், மூன்று நாள்கள் பயணமாக நேற்று முன்தினம் சீனாவுக்குச் சென்ற டைந்தார். இந்த நிலையில், 20 இற்கும் மேற்பட்ட ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின என்று தெரிவிக் கப்படுகின்றது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், ஆசிய நாடுகளுக்கு 21 நாள்கள் அரசுமுறைச் சுற்றுப்பய ணம் மேற்கொண்டுள்ளார். முதல் நாடாக ஜப்பான் சென்ற அவர், அங்கு பிரதமர் அபே உடன் வட கொரியா விவகாரம் தொடர்பாக முக்கிய பேச்சு நடத்தினார்.

இதனையடுத்து, தென்கொரியா சென்ற அவர் அந்நாட்டு அதிபரைச் சந்தித்துப் பேசினார். இந்த நிலை யில், மூன்று நாள் பயணமான சீனாவுக்கு நேற்றுமுன்தினம் சென்றடைந்தார். அவருடன் மனைவி மெலினா ட்ரம்ப் உட்பட முக்கிய அதிகாரிகளும் சென்றனர்.

சீனா அதிபர் ஜி ஜின்பிங் உடன் சந்திப்பு நடத்திய பின்னர், சுமார் 900 கோடி அமெரிக்க டொலர் மதிப்பிலான 20 ஒப்பந் தங்கள் கையெழுத்தாகியுள்ளன எனச் சீனத் துணைப் பிரதமர் வாங் யங் தெரிவித்துள்ளார். வர்த் தகம், பொருளாதாரத் துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே உள்ள உறவுகளை வலுப்படுத்தும் வகையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன என அவர் கூறினார்.

சீனப்பயணத்தை முடித் துக்கொண்டு ட்ரம்ப், வியட்நாம் செல்ல இருக்கின்றார். அங்கு நடைபெறும் ஆசியப் பொருளா தார உச்சிமாநாட்டில் பங்கேற்க வுள்ளார். இம்மாநாட்டில் ரஷ்ய அதிபர் புடின் கலந்துகொள்ள இருக்கின்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

## பிலிப்பைன்ஸில் முன்னாள் அதிபர் மீது கிரிமினல் குற்றச்சாட்டுப் பதிவு



பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் அதி பர் பெனிக்கோ அகினோ மீது கிரிமினல் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என விசாரணைக்குழு அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் அதிபர் பெனிக்கோ அகினோ. இவர் அங்கு 2010ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை அதிபராக இருந்தார்.

இவர் கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம், தெற்கு மாகாணத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த மதப் பயங்கரவாதிகள் மீது தாக்குதல் நடத்தப் பொலிஸ் படைக்கு உத்தரவிட்டார். அப்போது பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருந்த ஒரு பொலிஸ் அதிகாரி தலைமையில் ஒரு படையைத் தெற்கு மாகாணத்துக்கு அனுப்பிப் பயங்கர வாதிகளுடன் சண்டையிட வைத்தார். இந்த மோதலில் பொலிஸார் 44 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். இது நாடு முழுவதிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அதிபரின் அலட்சியப்போக்கே இதற்குக் காரணம் என்கின்ற குற்றச்சாட்டு எழுந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக அந்நாட்டின் ஊழல் எதிர்ப்பு அமைப்பான 'அம்புட்ஸ்மேன்' விசா ரணைக் குழு, விசாரணை நடத்தி வருகின்றது.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் இந்த விசாரணைக்குழுமுன்னாள்அதிபர்பெனிக்கோ அகினோ மீது கிரிமினல் குற்றச் சாட்டுகளைப் பதிவு செய்தது. அதிகாரத்தைக் கைப்பற்றுதல், ஊழல் புரிதல் உள்ளிட்டவற்றை அடிப்ப டையாகக் கொண்டு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று விசாரணைக்குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பருவநிலை மாற்ற ஒப்பந்தம்:

# சிரியா இணையத் தயார்; தனிமையில் அமெரிக்கா




பரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் சிரியா கையெழுத்திடத் தயாராக இருக்கின்றது எனக் கூறியுள்ளமையை அடுத்து அமெரிக்கா மட்டும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

'குளோபல் வோர் மிங்' என்றழைக்கப் படும் உலக வெப்பமயமாதல் பிரச்சினைக்குக் கார ணமான பசுமைக்குடில் வாயுக்களின் வெளியேற்றத் தைக் கட்டுப்படுத்த, அமெரிக்கா மற்றும் 187 நாடுகள் செய்துகொண்ட ஒப்பந்தம், பரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தம் ஆகும்.

கடந்த 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இந்த ஒப்பந்தத்தில் உலக நாடுகள் கையெ ழுத்திட்டன. நிகரகுவா மற்றும் சிரியா ஆகிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்தி டாமல் இருந்தன. நிக்கரகுவா, கடந்த ஒக்ரோபர் மாதம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

கடந்த ஜூன் மாதம் இந்த ஒப்பந்தத்தில் இருந்து விலகிக்கொள்கின்றோம் என அமெரிக்கா அறிவித்தது. இதையடுத்துச் சிரியாவும், அமெரிக்காவும் இந்த ஒப்பந்தத்தில் சேராமல் இருந்தன.

இந்த நிலையில், பரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் சிரியா கையெழுத்திடத் தயாராக உள்ளது என அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தம் முதலில் கையெழுத்தானபோது, சிரியா சர்வ தேச அளவில் விலக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து தற்போது அமெரிக்கா மட்டும் பரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்திற்கு எதிராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ப)

## ராஜஸ்தான் உள்ளூர் ரி—20:

# ஓட்டங்கள் எவையும் கொடுக்காமல் 10 விக்கெட் வீழ்த்திய சிறுவன்

ராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூர் கிரிக்கெட்டில் எதிர் அணிக்கு ஓட்டங்கள் ஏதும் கொடுக்காமல் 10 விக்கெட்டுகளையும் ஒரு சிறுவன் வீழ்த்தியமை அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் பாவர் சிங் ரி-20 கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. உள்ளூர் மைதானத்தின் உரிமையாளர் தனது தாத்தாவின் நினைவாக இதை நடத்தினார். இந்தப் போட்டியில் இரண்டு கிரிக்கெட் அக்கடமியைச் சேர்ந்த அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய திஷா கிரிக்கெட் அக்கடமி அணி 20 ஓவர்கள் முடிவில் 156 ஓட்டங்களை எடுத்தது. இரண்டாவதாகத் துடுப் பெடுத்தாடிய பியர்ல் அக்கடமி அணி 36 ஓட்டங்களுடன் சுருண்டது. திஷா அணியின் வீரரான ஆகாஸ் சவுத்ரி ஓட்டங்களில் எதுவும் விட்டுக்கொடுக்காமல் 10 விக் கெட்டுகளையும் வீழ்த்திச் சாதனை படைத்தார்.

ஆகாஸ் தனது முதல் மூன்று ஓவரில் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார். கடைசி ஓவரில் ஹாட்ரிக் விக்கெட்டுடன் 4 விக்கெட் வீழ்த்தி அசத்தினார். மொத்தமாக தான் வீசிய 4 ஓவரில் எதிர் அணிக்கு எந்த ஓட்டங்களும் விட்டுக்கொடுக்காமல் 10 விக் கெட்டுகளையும் மொத்தமாக அள்ளினார்.

ஆகாஷின் அதிரடியான ஆட்டம் அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

(ப)





# மாறி மாறிப் புகழும் அக்தர் — கோஹ்லி

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தரை தான் எதிர்கொண்டதில்லை. இது தனக்கு அதிர்ஷ்டமே என்று இந்தியக் கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோஹ்லி அக்தரைப் புகழ்ந்தமையையடுத்து ஷோயிப் அக்தரும் விராட் கோஹ்லியை புகழ்ந்து கருத்து வெளியிட்டுள்ளார்.

'பிரேக்பாஸ்ட் வித் சம்பியன்ஸ்' என்ற கலந்துரையாடலில் கோஹ்லி கூறும்போது, நான் சொகைப் அக்தரை எதிர்கொண்டதில்லை. ஆனால், தம்புள்ளையில் அவர் ஆடிய போது நானும் ஆடினேன். அவரின் பந்துவீச்சை எதிர்கொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஏனெனில் நான் முன்னரே ஆட்டமிழந்து விட்டேன். ஆனால் அவர் பந்து வீசியமையைப் பார்த்து அரண்டு போனேன், பிற்காலத்தில் கூட அவர் அபாயகரமாகவே வீசுவார். அப்போது நினைத்தேன் அவர் உச்சத்தில் இருந்த போது துடுப்பாட்ட வீரர்கள் அவரை எதிர்கொள்ள விரும்பியிருக்க மாட்டார்கள் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு அக்தர் பதிலளிக்கும் வகையில் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். கோஹ்லி துடுப்பெடுத்தாடும்போது நான் பந்து வீசாதமை நல்லது என்று நினைக்கின்றேன். நகைச்சுவை ஒருபுறம் இருக்கட்டும், அவர் ஒரு சிறந்த வீரர். அவருக்கு வீசுகின்றமை நிச்சயமாக சவாலாக அமைந்திருக்கும் என்று பதிவிட்டுள்ளார்.

கோஹ்லி குறிப்பிடுவது 2010ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற ஆசியக் கிண்ணப் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய கிரிக்கெட் தொடர்:

# இலங்கைக்கு ஆரம்பமே தடுமாற்றமா?



ஏழு வார காலம் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு இந்தியா சென்றிருக்கும் இலங்கைக் கிரிக்கெட் அணியின் ஆரம்பமே சற்றுத் தடுமாறியிருக்கிறது. நேற்று முன்தினம் டில்லி போய்ச் சேர்ந்த இலங்கைக் குழாமில், விசா பிரச்சினையால் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளர் திலான் சமரவீர கலந்துகொள்ளவில்லை.

இலங்கை அணியின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராகக் கடந்த நான்காம் திகதி இலங்கை அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் திலான் சமரவீர நியமிக்கப்பட்டார். தற்போது ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் வசித்து வரும் திலான், இந்தியச் சுற்றுப் பயணத்தில் கலந்துகொள்வதற்குக் கடந்த திங்கட்கிழமை இலங்கை வந்தார். இலங்கையில் பயிற்சி நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடப் போதிய கால அவகாசம் இல்லாத நிலையில், ஆஸ்திரேலியா சென்றதும் பயிற்சிகளை ஆரம்பிக்க திலான் எண்ணியிருந்தார்.

எனினும், இரண்டு நாள்களுக்குள் அவருக்கு இந்திய விசா கிடைக்கவில்லை. இதனால் இலங்கை அணியினருடன் அவரால் இந்தியா செல்ல முடியவில்லை.

இந்த நிலையில் இன்று வெள்ளிக்கிழமை அவருக்கு விசா கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படிக் கிடைக்கும் பட்சத்தில் அவர் உடனடியாக இந்தியாபுறப்படுவார்என்றுகூறப்படுகிறது.

# ஆரம்பமாகிறது ஆஷஸ் போர்

ஆஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகள் போட்டியிடும் ஆஷஸ் தொடர் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.





பொதுவாக இரு அணிகளுக்கிடையில் நடைபெறும் டெஸ்ட் போட்டி போல் இந்தத் தொடரை எடுத்துக் கொள்ள முடியாது. கிட்டத்தட்ட இது இவ்விரு அணிகளுக்கிடையில் நடைபெறும் கிரிக்கெட் போர் என்றே சொல்லலாம்.

5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் இரு அணிகளும் தங்கள் பலத்தை நிரூபிக்கக் கடுமையான பயிற்சியை மேற்கொண்டு வருகின்றன. இந்தத் தொடரில் இரு அணிகளின் வேகப்பந்து வீச்சாளர்களில் யார் ஆதிக்கம் செலுத்துவார்களோ அவர்களுக்கே வெற்றி வாய்ப்பு எனக் கணிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய இரு அணிகளை எடுத்துக்கொண்டால் வேகப் பந்து வீச்சில் அவை பலமான அணிகளாகக் காணப்படுகின்றன. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் யார் இம்முறை ஆஷஸ் தொடரில் ஆதிக்கம் செலுத்தப் போகிறார்கள் என்று.

# பும்ரா, சஹாலை டெஸ்ட் அணியில் சேர்க்க வேண்டும் - கவாஸ்கர்

சிறப்பாகப் பந்துவீசி வரும் பும்ரா மற்றும் சஹாலை டெஸ்ட் அணியில் சேர்க்க வேண்டும் என்று முன்னாள் தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான 20 ஓவர் தொடரை இந்திய அணி கைப்பற்றுவதற்கு வேகப்பந்து வீரர் பும்ரா, சுழற்பந்து வீச்சாளர் யசுவேந்திர சஹால் ஆகியோர் முக்கிய பங்கு வகித்தனர்.

திருவனந்தபுரத்தில் நடந்த கடைசிப் போட்டியில் 8 ஓவரில் 68 ஓட்ட இலக்கை வைத்து இந்த இருவரும் சிறப்பாகப் பந்துவீசி அணியை வெற்றி பெறவைத்தனர்.

இந்த நிலையில் பும்ராவும், சஹாலும் டெஸ்ட் அணிக்குத் தயாராகி விட்டனர் என்றும் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

பும்ராவும், சஹாலும் மிகவும் சிறப்பான நிலையில் உள்ளனர். இருவரது பந்துவீச்சும் மிகவும் அபாரமாக இருக்கின்றது. எதிர் அணியை அச்சுறுத்தும் வகையில் வீசுகிறார்கள். ஐ.பி.எல். போட்டியில் பெற்ற அனுபவம் முழுவதையும் பயன்படுத்துகிறார்கள். எந்தத் துடுப்பாட்ட வீரருக்கு எந்த முறையில் எப்படி நேர்த்தியாக வீச வேண்டும் என்பதை இருவரும் நன்றாக அறிந்து வைத்துள்ளார்கள்.

அனைவரது இதயங்களையும் கவர்ந்த பும்ரா, சஹால் ஆகியோரை



டெஸ்ட் அணியில் சேர்க்கலாம் என்று கருதுகிறேன். தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற வலுவான அணிகளுக்கு எதிராக இருவரும் சிறப்பாகச் செயற்படுவார்கள். இருவரும் டெஸ்ட் அணியில் விளையாடத் தயார் நிலையில் உள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir




# பயிற்சியை ஆரம்பித்த இலங்கை அணி

இந்தியாவுக்குச் சென்றுள்ள தினேஷ் சந்திமால் தலைமையிலான இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியினர் நேற்றுப் பிற்பகல் பயிற்சியில் ஈடுபட்டனர்.

இவர்கள் கொல்கத்தாவில் உள்ள நட்சத்திர விடுதியில் தங்கியுள்ளனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியுடன் 3 டெஸ்ட், 3 ஒரு நாள் போட்டி மற்றும் மூன்று 20 ஓவர் போட்டிகளில் இலங்கை அணி பங்கேற்கின்றது.

இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி கொல்கத்தா ஈடன்கார்டனில் இம்மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதற்கு முன்பாக இம்மாதம் 11, 12ஆம் திகதிகளில் இந்தியக் கிரிக்கெட் பேரவைத் தலைவர் லெவன் அணிக்கு எதிராக இரண்டு நாள் பயிற்சி ஆட்டத்திலும் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# இந்தியாவின் தயவில் முதலிடத்தில் பாக்.

இந்திய மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் இந்திய அணி நியூசிலாந்தை வீழ்த்தியதன் மூலம் நியூசிலாந்தின் முதலிடம் பறிபோயுள்ளது.

இந்தத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் தரநிலையில் முதலிடத்தில் நீடித்த நியூசிலாந்து, இந்தியாவிடம் கண்ட தோல்விகள் காரணமாக இரண்டாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

சப்ராஸ் அஹமெட் தலைமையில் தொடர்ச்சியாக ரி-20 போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தி வந்த பாகிஸ்தான் அணி தொடர்ந்தும் 124 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கின்றது.

நியூசிலாந்து 120 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், மேற்கிந்திய தீவுகள் 120 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும், இங்கிலாந்து, இந்திய அணிகள் தலா 119 புள்ளிகளுடன் முறையே நான்காம், ஐந்தாம் இடங்களிலும் நீடிக்கின்றன.

தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா, இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அணிகள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

# இலங்கைக்கு எதிரான ரி-20; டோனியை நீக்க வேண்டும்

—ஆகாஷ் சோப்ரா



இலங்கைக்கு எதிரான 20 ஓவர் போட்டி அணியில் இருந்து டோனியை நீக்கிவிட்டு வேறு ஒருவருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் ஆகாஷ் சோப்ரா வலியுறுத்தியுள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது 20 ஓவர் போட்டியில் இந்திய அணி தோற்றமை தொடர்பாக டோனி விமர்சனத்திற்கு உள்ளானார்.

மிகப்பெரிய இலக்கு இருக்கும் போது அவர் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இதனால் 20 ஓவர் போட்டியில் இருந்து டோனி விலகி, இளம் வீரர்களுக்கு வழிவிட வேண்டும் என்று, முன்னாள் வீரர்கள் வி.வி.எஸ்.லட்சுமணன், அஜித் அகார்கர் ஆகியோர் விமர்சித்து இருந்தனர்.

இந்த நிலையில், இலங்கைக்கு எதிரான 20 ஓவர் போட்டி அணியில் இருந்து டோனியை நீக்கிவிட்டு, வேறு ஒருவருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் ஆகாஷ் சோப்ரா வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

நியூசிலாந்துக்கு எதிரான தொடர் முடிந்து விட்டது. அடுத்து இலங்கையுடன் இந்திய அணி விளையாடுகின்றது. அந்த அணி உயர் மட்ட அளவில் சமநிலையான அணி அல்ல. நாம் வாய்ப்புகளைப் பெறலாம்.

ஆனால், இந்தத் தொடருக்குப் பிறகு வலிமையான தென்னாபிரிக்காவுடன் விளையாடுகிறோம் என்பதை மனதில் கொள்ள வேண்டும். இதில் கடினமாகப் போராட வேண்டி இருக்கும். - என்று தெரிவித்துள்ளார்.

# இலங்கை அணியின் பயிற்சியாளராக சண்டிகா ஹத்துருசிங்க?

இலங்கை அணியின் பயிற்சியாளராக முன்னாள் வீரரான சண்டிகா ஹத்துருசிங்க நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பங்களாதேஷ் அணியின் தலைமைப் பயிற்சியாளராகப் பதவி வகித்து வரும் சண்டிகா ஹத்துருசிங்க, இதுவரையிலும் இலங்கை அணிக்காக 26 டெஸ்ட் மற்றும் 35 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

உலகளவில் பிரபலமான பயிற்சியாளர்களில் ஒருவராகத் திகழும் சண்டிகா ஹத்துருசிங்கவின் தலைமையில் பங்களாதேஷ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது.

இந்த நிலையில் இவரை இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்க இலங்கைக் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் அதிகாரி ஒருவர் கூறுகையில், Dean Jones மற்றும் Jason Gillespie உள்ளிட்டோர் பரிசீலனையில் உள்ள நிலையில், பெரும்பாலும் சண்டிகா ஹத்துருசிங்கவே நியமிக்கப்படலாம் எனத் தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இலங்கை அணிக்குத் தலைமைப் பயிற்சியாளர் நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு – கிழக்குத் தமிழ் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வரவு – செலவுத் திட்டத்தில் பல அறிவிப்புக்களை நிதியமைச்சர் மங்கள சமரவீர நேற்று வெளியிட்டார்.

நேற்றுப் பிற்பகல் 3.03 மணியளவில் நிதியமைச்சர் மங்கள சமரவீர, அவைக்குள் பிரவேசித்தார். ஆளும் தரப்பினர் அவரை மேசைகளில் தட்டி வரவேற்றனர்.

அவர் சபைக்கு வருவதற்கு முன்னர் மங்கள சமரவீரவுடன் சகஉறுப்பினர்கள் செல்பிஎடுத்து கொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், ஒன்றிணைந்த எதிர்க்கட்சி நாடாளுமன்றஉறுப்பினர்களும் நாடாளுமன்றத்துக்கு சைக்கிளில் வருகை தந்தனர்.

பிற்பகல் 3.10 மணியளவில் அவர் தனது வரவு – செலவுத் திட்ட உரையை ஆரம்பித்தார்.

நல்லாட்சி அரசு என்ற ரீதியில், பொருளாதரத்தில் தீர்க்கமான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு எம்மால் முடிந்தது. இந்த வரவு – செலவுத்திட்டம், நல்லாட்சி அரசின் மூன்றாவது வரவு – செலவுத்திட்டமாகும். வரவு– செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிப்பதில்பெருமையடைகின்றேன் என்று கூறி வரவு– செலவுத் திட்ட அறிவிப்புக்களை அவர் அடுக்கடுக்காக வெளியிட்டார்.

அவற்றில் வடக்கு – கிழக்குப் பகுதிகளுக்கும் அவர் அதிகளவு சலுகைகள், நன்மைகளை அறிவிக்கத் தவறவில்லை.

முக்கியமாக,

– வடக்கு – கிழக்கில் 50,000 கல் வீடுகளுக்கு 270 கோடி ரூபா ஒதுக்கீடு, யாழ். பல்கலைக்கழகத்துக்கும் நிதி, காரைநகர் மீன்பிடித்துறையைப் புனரமைக்கவும் நிதி ஒதுக்கீடு, நந்திக்கடலை சீரமைக்கவும் உதவியளிப்பு, வடக்கு – கிழக்கு மக்களின் மீள்குடியமர்வுக்கு 300 கோடி ரூபா, – யாழ்ப்பாணத்திலும் பொருளாதார மையம், நெடுந்தீவு, கிளிநொச்சியில் பனைவளத்தை மேம்படுத்த 40 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு, வடக்கு– கிழக்குக் கடன் பிரச்சி னைக்குத் தீர்வு ஆகியன அறிவிப்புக்கள் உட்பட பல அறிவிப்புக்களை நிதியமைச்சர் சபையில் வெளியிட்டார்.

தெற்கு மக்களில் மட்டுமல்லாமல் வடக்கு – கிழக்குத் தமிழ் மக்களிலும் நல்லாட்சி அரசு கவனம்கொண்டுள்ளதுஎன்பதை வெளியுலகுக்குக் காண்பிக்கும் வகையில் அவரது அறிவிப்புகள் இருந்தன என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

தனது உரையை மாலை 5.45 மணி வரை தொடர்ந்தார் அமைச்சர் மங்கள சமரவீர.

அவரது அறிவிப்புக்களின்போது அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேசைகளில் தட்டி வரவேற்பளித்தனர். எதிரணியினர் இடையிடையே குழப்பம் ஏற்படுத்தினர்.

## 300 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்துடன் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திக்கு 300 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பாகக் காலநிலை அவதான நிலையத்தை நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சுயதொழில் முயற்சியாளர்களுக்கான கடன் திட்டத்திற்கு 50 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தற்கு 300 கோடி ரூபாஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உள்நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள சமரவீர நாடாளுமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திட்டத்தில் 75 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து ஐ.நா. அமைதிப்படைக்கு அனுப்பப்படும் இராணுவத்தின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு ஐ.நா. கோரியுள்ளதாகவும், இதனடிப்படையில் எதிர்காலத்தில் அவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்க இந்த நிதியை ஒதுக்கீடு செய்வதாகவும் நிதியமைச்சர் மங்கள சமரவீர தனது வரவு – செலவுத் திட்ட உரையில் கூறினார்.

அத்தோடு, பொலிஸ் மற்றும் குற்றப் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்குச் சுமார் 50 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு 900 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பௌத்த வாசிகசாலை ஒன்றை அமைப்பதற்கு 5 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தராஜப் பெருமாள் போன்றோரை உள்ளடக்கிய தரப்பு ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா அணி என்றும் இயங்கின.

எனினும் சுரேஷ் பிறேமச்சந்ரன் தரப்பினர் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி தங்களுடையதே என்பதை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டார்.

இதனையடுத்து அதுவரை ஈ.பி.ஆர்.எல்.எவ்.பத்மநாபாஅணியாகச்செயற்பட்டுவந்தகுழுவினர் தமது கட்சியின் பெயரை தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி என்று மாற்றி இயங்கத் தொடங்கினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தங்களை இணைத்துக் கொள்வதற்கும் அவர்கள் முயன்றனர்.

ஆனால் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவில் இடம் பெற்றிருந்த சுரேஷ் பிறேமச்சந்திரனின் கடும் எதிர்ப்பு மற்றும் பலத்த ஆட்சேபம் காரணமாக அக்கட்சியினரைக் கூட்டமைப்புக்குள் உள்வாங்கு வது சாத்தியப்படாமல் போயிற்று.

தற்போது சுரேஷ் பிறேமச்சந்திரன்தரப்புகூட்டமைப்பின்செயற்போக்கிலிருந்து வெளியேறும் போது அந்த இடத்துக்கு மாற்று ஈ.பி.ஆர்.எல்.எவ். அணியை உள்வாங்குவதுகுறித்துகூட்டமைப்புத் தலைமை – குறிப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைமை – மிக 'ஸீரியஸாக' சிந்திப்பதாக அறிய வந்தது. (உ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கப்படவுள்ளது. இதற்காக 20 கோடி மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படும் என்று நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அதேவேளை, ஸ்மார்ட் வகுப்பறைகளை உருவாக்கும் திட்டத்துக்காக 75 கோடி ரூபா நிதி ஒதுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தற்போது வழங்கப்படுகின்ற 3ஆயிரத்து 500 ரூபா உதவித் தொகை 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
– செலவுத் திட்டத்தில் 140 கோடி ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் மங்கள சமரவீர இதனை நேற்று அறிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை அரசு அளித்த வாக்குறுதிக்கு அமைவாக, குறித்த அலுவலகத்தை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும், அதனைச் செயற்படுத்த முடியாமல் இழுபறியில் காணப்பட்டு வந்த நிலையில், தற்போது அதற்கான நிதியொதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2018ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இந்த அலுவலகம் தனது செயற்பாடுகளை ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பதிலாக, தங்களுடைய குடும்பத்தை அபிவிருத்தி செய்து கொள்வதிலேயே கடந்த ஆட்சியாளர்கள் குறியாக இருந்தனர் என அமைச்சர் மேலும் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே அவர் இவ்வாறு மறைமுகமாகச் சாடினார்.

2018ஆம் ஆண்டு வரவு – செலவுத்திட்டத்தை தொழிற்றுறையை ஊக்குவிக்கும் வரவு செலவுத்திட்டம் (எண்டர்பிரைஸ் பட்ஜெட்) என்று மங்கள பெயரிட்டார்.

## அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விலையை அறிவித்துள்ளது. தனது வரவு – செலவுத் திட்ட உரையில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர இதனை அறிவித்தார்.

ஒரு கிலோ உருளைக்கிழங்கு 80 ரூபாவாகவும், ஒரு கிலோ பெரிய வெங்காயம் 150 ரூபாவாகவும், ஒரு கிலோ பருப்பு 150 ரூபாவாகவும், ஒருகிலோநெத்தலி 750 ரூபாவாகவும், ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் 350 ரூபாவாகவும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சில்லறை விற்பனையாளர்கள் கட்டுப்பாட்டு விலையில் அவற்றை விற்பனை செய்யாவிட்டால் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாவார்கள் எனவும் அமைச்சர் கூறினார்.

## பனைவளத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்துடன் மயிலிட்டி துறைமுகம் அபிவிருத்திசெய்யப்படவுள்ளது. மீனைக் களஞ்சியப்படுத்துவதற்கான குளிர்சாதன வசதிகளுக்காக 15 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலி தொழிற்பேட்டையில் மின்சார வசதிகளை மேற்கொள்வதற்கான செலவில் 50 சதவீதத்தை அரசு பொறுப்பேற்கின்றது.

## வடக்கு - கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வித்தார்.

அதேவேளை, இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பு வழங்குகின்ற தோட்டப் பிரதேச மக்களின் லயன் குடியிருப்புகளுக்குப் பதிலாக 25 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

## காரைநகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்கு 175 கோடி ரூபா நிதியொதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

அத்தோடு, சிறுதோட்ட தேயிலை உரிமையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 25 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அன்னாசி மற்றும் வாழைப் பழம் போன்ற பழவகைகளின் உற்பத்தியை ஊக்குவிக்க விசேட ஆராய்ச்சி நிலையமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 2025ஆம் ஆண்டளவில் சுற்றுலாத்துறையின் வளர்ச்சி 3 மடங்குகளால் அதிகரிக்கப்படவுள்ளது. அதனை இலக்காகக் கொண்டு, சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய சில உணவுகள் மற்றும் பானங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டணத் தீர்வை அகற்றப்படவுள்ளது. அத்துடன் சகல சுற்றுலாத்துறை சேவை வழங்குநர்களையும் இலங்கைச் சுற்றுலாத்துறைச் சபையின் கீழ் பதிவு செய்யுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன் காரணமாகத் திருமணம் செய்து குடும்ப வாழ்க்கையில் உள்ள அரச மற்றும் தனியார்றுறை ஊழியர்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தில் வாழ்வது கடினமாகியுள்ளது.

2018ஆம் ஆண்டு வரவு– செலவு திட்டத்தில் அவர்கள் எதிர்பார்த்தசம்பளஅதிகரிப்புஎதுவுமே கிடைக்கவில்லை. நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்தபோது அரச ஊழியர்களுக்கு 10ஆயிரம் ரூபாவும், தனியார்துறை ஊழியர்களுக்கு 2ஆயிரத்து 500 ரூபாவும் சம்பளம் அதிகரிக்கப்பட்ட போதும் இந்தமுறை அவ்வாறான சலுகைகள் எதுவும் அறிவிக் கப்படவில்லை.

அரச ஊழியர்களுக்காகக் கூட்டுச் சம்பள முறை ஒன்று ஏற்படுத்தப்படும் என நிதி அமைச்சர் மங்கள சமரவீர வரவு – செலவு திட்டத்தில் அறிவித்தார். ஆயினும் அதுபற்றிய விளக்கம் எதனையும் அவர் வழங்கவில்லை.

## ரூ.270...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டுள்ளதாக நிதியமைச்சர் மங்கள நேற்று அறிவித்தார்.

இதில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் நிதியமைச்சர் குறிப்பிட்டார். அந்த மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைக்காக 2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக அவர் கூறினார்.

## ஓட்டோக்களுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீற்றர் பொருத்துவது கட்டாயமாக்கப்படுவதுடன், அது தற்போதும் நடைமுறையில் உள்ளது என்றும் கூறினார்.

சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டும் சிறப்புப் பயிற்சி ஓட்டோச் சாரதிகளுக்கு அரசால் வழங்கப்படுவதுடன், அவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு இலட்சனை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலை நாட்டு விழா

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலை நாட்டு விழா வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00மணியளவில் நாவலர் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் , விமர்சையாக நடைபெறவுள்ளது. பாடசாலைத் தலைவி திருமதி சிவாநந்தினி துரைசாமி, அதிபர் , முக்கியஸ்தர்கள், மாணவிகள் மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சைக்கிளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொது எதிரணியினர் சைக்கிள்களில் அங்கு வருகை தந்தனர்.

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து, பல்வேறு தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை எடுத்துக்காட்டும் விதமாகவே மஹிந்த அணியினர் இவ்வாறு சைக்கிள்களில் நாடாளுமன்றத்துக்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நல்லாட்சி எனக்குறிப்பிடப்படும் இந்த ஆட்சியில் மக்கள் சைக்கிள், மாட்டுவண்டில்போன்ற எரிபொருள்கள் பயன்படுத்தாத வாகனங்களில் பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என அங்கு நின்ற செய்தியாளர்களிடம் சத்தமாகக் கூறியவாறு சபைக்குச் சென்றார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த.

## நந்திக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மைக்க ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் மங்கள சமரவீர தனது வரவு – செலவுத் திட்ட உரையில்இதனைக்குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் –

சுற்றுலாத் தொழிற்துறையை அந்த ப் பகுதிகளில் நிர்மாணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பொலன்னறுவை, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் விவசாயக் களஞ்சியசாலைகளும் நிர்மாணிக்கப்படும்.

கடல்அட்டைகள் பிடிக்க, பாதுகாக்கக் கிளிநொச்சி – பூநரியில் சிறப்பு நிலையம் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடிக்காக 55 அடி நீளமான இழுவைப் படகுகளின் செலவு வீதத்தில், 50 வீதத்தை அரசு பொறுப்பேற்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் நீர்வாழ் உயிரியல் பூங்காவுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் – என்றார்.

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ளது.

விரைவில் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என நிதியமைச்சர் மங்கள நேற்றுத் தனது வரவு – செலவுத் திட்ட உரையில் கூறினார்.

## கடன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
னாலான கடன் வசதிகள் வழங்குவதற்கு 100 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் மங்கள நேற்று அறிவித்தார்.

# சுவிஸ் சிவஞான சித்தர் பீடம் கிளி. மாணவர்களுக்கு பரிசு!





நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் ஒழுங்கமைப்பில் சுவிஸ் சிவஞான சித்தர் பீடம் கிளிநொச்சி விவேகானந்த நகர் கிராமத்தில் 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டுவரை தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 128 மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை விவேகானந்தநகர் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கிராம சேவையாளர், மதகுரு, கிராம மட்டப் பொது அமைப்புக்கள், கிராம மக்கள் உட்படப் பெருமளவானவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

நடராசா சிவயோகநாதன் ஐயா, சிவஞானசித்தர்பீடம், அறிவு ஆய்வாளர் வளாகம் சுவிற்ஸர்லாந்தின் தலைவராகச் செயற்பட்டு வருகின்றார்.

புலம்பெயர் தேசங்களில் தமிழர் தமது மொழி, பண்பாடு, சமய ஆசாரமுறைமைகள் ஆன்மிகம் போன்றவற்றில் வழுவாதிருக்க வேண்டும் என்ற நோக்கோடு புலம்பெயர்தமிழ் மாணவர்களின் கல்விக்காகவும், ஆன்மீகத்துக்காகவும், பல மாநிலங்களில் அறிவு ஆய்வாளர் வளத்தை நிறுவி அதனூடே 300 மாணவர்களுக்கு உயர் கல்வி கற்கக்கூடியதாக எல்லா மொழிகளிலும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாலும், பல்கலைக்கழக மாணவர்களாலும் வகுப்புக்களை நடத்துகின்றார். இதனால் இங்குள்ள மாணவர்களும் கல்வியிலும் , எமது கலாசாரம், ஆன்மீகம் போன்றவற்றிலும் முன்னணி வகிக்கின்றார்கள்.இதேபோல் எமது நாட்டிலும் மாணவர்கள் கல்வியில் முன்னுக்கு வரவேண்டும் என்ற நோக்கம் கருதி இப்படியான கல்வி ஊக்குவிப்பு உதவிகளைச் செய்து வருகின்றார்.







மேற்படி சிவஞான சித்தர் பீடம் பரிசளிப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கி உரையாற்றியபோது, இதில் கலந்துகொண்ட மாணவர்கள் அனைவரும் கல்வியில் மேன்மேலும் பல சாதனைகளைப் புரிய தமது ஊக்கத்தையும் விடா முயற்சியையும் கைவிடாதிருக்க வேண்டும்.

மாணவர்களை ஊக்குவிப்பதற்காக சுவிஸ் நாட்டின் சிவஞான சித்தர் பீடம் இப்பரிசில்களை வழங்கிக் கௌரவித்தமைக்காக அவர்களுக்கும் இவ்வேளையில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.- என்றார்.

(இ)









முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட விஸ்வமடு விஸ்வநாதர் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வெற்றியாளர் கௌரவிப்பும் பாடசாலை அதிபர் யோ.மகேஸ்வரன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் ஆரம்பமாகி நடைபெற்றன.

இந்நிகழ்வில் இம்முறை இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றியீட்டிய 40 மாணவர்கள் பரிசில்கள், கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இன்னும் மாவட்ட தேசிய ரீதியிலும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டி பாடசாலைக்கு பெருமை சேர்த்தவர்கள் பலரும் கௌரவிக்கப்பட்டனர்

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கௌர விப்புக்களையும் பரிசில்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், மக்கள் வங்கி வன்னிப்பிராந்திய முகாமையாளர் சிவா சிவக்கொழுந்து, இலங்கை வங்கியின் விஸ்வமடு முகாமையாளர் சி.சந்திரகாந்த், பொறியியலாளர் பொ.கெங்கேஸ்வரன் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-81)





வடமாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மினின் நிதியொதிக்கீட்டின் கீழ் மாணவர்களுக்கு பாடசாலை பைகள் மற்றும் சமூக நிறுவங்களுக்கு நிதியும், ஒலி பெருக்கிச் சாதனங்களும் வழங்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண சபை உறுப்பினர் ஆர்னோல்ட் மற்றும் உறுப்பினர்கள் அவற்றை வழங்கினார்கள். (இ-19)

# அமைச்சருக்கே அதிகாரம் வழங்காத அரசு வடக்குக்கு அதிகாரம் பகிருமா?

## கேள்வி எழுப்புகிறார் இராதாகிருஸ்ணன்



கொழும்பு, நவ.10

இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்காத இந்த அரசு வடக்குக்கு எவ்வாறு அதிகாரப்பகிர்வை வழங்கப் போகின்றது என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கல்வி இராஜாங்க அமைச்சின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கல்வி அமைச்சில் எனக்கு எந்தவித அதிகாரமும் வழங்கப்படவில்லை. இந்த அரசில் இருக்கும் இராஜாங்க அமைச்சருக்கே அதிகாரம் வழங்க முடியாத அரசு, எவ்வாறு தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கும் என எதிர்பார்க்க முடியும்.

அதிகாரப்பகிர்வு என்பதில் தமிழ் மக்களுக்கு ஏதாவது நன்மைகள் ஏற்படவேண்டும். எனினும், இந்த அரசில் அதனை எதிர்பார்க்க முடியாது.

எங்களுடைய கல்வி அமைச்சில் அனைத்து அதிகாரிகளும் அசமந்தப் போக்குடனேயே செயற்படுகின்றார்கள். குறிப்பாகப் பொது மக்களை அலைக்களிப்பதில் இவர்களைப் போலச் செயற்பட முடியாது.

அரச வர்த்தமானி மூலம் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலும், அது எதுவுமே செயற்படுத்த முடியாமல் இருக்கின்றது. கல்வி அமைச்சரும் இதனைக் கண்டு கொள்வதில்லை.

இது தொடர்பாக நான் பல முறை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றேன்.

அதிகாரிகள் அசமந்தப் போக்குடனேயே செயற்படுகின்றார்கள். நான் ஒரு தமிழ் அமைச்சராக இருக்கின்ற காரணத்தால், இவ்வாறு செயற்படுகின்றார்களா? என்ற கேள்வியும் எனக்குள் எழுகின்றது. மக்களுக்குச் சேவை செய்ய முடியாவிட்டால் நான் இராஜாங்க அமைச்சராக இருப்பதில் எந்தவிதமான பயனும் இல்லை. கடந்த காலங்களில் பல போராட்டங்களுக்கு மத்தியிலேயே பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வந்தேன். எனினும் தொடர்ந்து அவ்வாறு செய்ய முடியாது.

சிறுபான்மை மக்களின் ஆதரவோடு அமைக்கப்பட்ட இந்த நல்லாட்சி அரசு கட்டாயமாகச் சிறுபான்மை மக்களைக் கவனத்தில் கொள்ளாவிட்டால், கடந்த அரசுக்கு ஏற்பட்ட நிலைமை இந்த அரசுக்கும் ஏற்படும்.

இந்த நிலை தொடர்ந்தால் கல்விநடவடிக்கைகள் பாதிக்கப்படும். இனியும் இதனை அனுமதிக்க முடியாது – என்றார்.

# சுழிபுரம் – நெல்லியான் வீதியிலுள்ள மதகின் புனரமைப்பு முடியவில்லை; மக்கள் பாதிப்பு





யாழ்ப்பாணம், நவ.10

சுழிபுரம் – நெல்லியான் வீதியில் உள்ள பிரதான மதகின் புனரமைப்புப் பணி உரிய காலத்தைக் கடந்தும் முடிவுறுத்தப்படாமையால் பொதுமக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த வீதிப் புனரமைப்பின்போது பொதுமக்களின் போக்குவரத்துக்கான பக்க வீதி உரியவாறு அமைக்கப்படவில்லை. இதனால் மழைகாலமாகிய தற்போது அந்த வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய மேற்படி வீதியில், கல்விளானுக்கு அண்மையில் உள்ள பிரதான மதகு தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்தப் புனரமைப்புப் பணியின்போது பொது மக்களின் போக்குவரத்துக்கு உரிய மாற்றுப் பாதை அமைக்கப்படவில்லை.

மதகுக்கு அருகே மண் போடப்பட்டுள்ள போதிலும் அது மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கான வீதியாக மாற்றியமைக்கப்படவில்லை. இதனால் அவ் வீதியால் போக்குவரத்துச் செய்யும் மாணவர்கள், ஆசிரியர்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் உள்ளிட்ட அனைவரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்வீதியால் வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போதைய மழையின்போது வீதியால் சென்ற சிலர் வழுக்கி வீழ்ந்து விபத்துக்களிலும் சிக்கியுள்ளனர்.

மேலும், மேற்படி மதகுப் புனரமைப்பு கடந்த ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. செப்ரெம்பர் மாதம் முடிவுறுத்தப்படவேண்டிய நிலையில், இதுவரை முடிவடையவில்லை. இதனாலேயே மழை காலத்தில் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டுள்ளன எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.









அண்மையில் காரைநகர் – கிழவன்காடு கலாமன்றத்தினால் நடத்தப்பட்ட பரிசளிப்பு கலை நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்...

# யாழ். சிறைச்சாலைக்குள் கைதிகளிடம் கைபேசிகள்

## நீதிமன்றில் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் சிறைக்கைதியாக இருந்து கொண்டு ஏனைய கைதிகளுக்குத் தொலைத்தொடர்பு சேவைகளை நடத்தி வரும் றஜிந்தன் தொடர்பாக நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையினுள் உணவுப் பொதியினுள் கஞ்சாவைக் கொண்டு செல்ல முயன்ற வன்னிப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுத் தற்போது நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் விளக்கமறியல்சாலையில் உள்ளார்.

அவரைப் பிணையில் விடுவிப்பது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர் சார்பில் தோன்றிய சட்டத்தரணி பிரதீபன், குறித்த இளைஞருக்கு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதியாக இருக்கும் றஜிந்தன் என்பவரே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தனது மனைவியிடமிருந்து உணவுப் பொதியைப் பெற்று வந்து தருமாறு கேட்டுக் கொண்டார் எனவும், அந்த உணவுப் பொதியினுள் கஞ்சா இருப்பது தெரியாமல் கொண்டு வந்தபோதே குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார் எனவும் தெரிவித்தார்.

சிறைச்சாலைக்குள் கையடக்கத் தொலைபேசிகளைப் பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் யாழ்ப்பாணசிறைச்சாலைக்குள் பலகைதிகள் கையடக்கத்தொலைபேசிகளை பாவிப்பதாகவும், வாள்வெட்டுச் சந்தேகநபர்களுடைய முகநூல்கள் பல இயங்கி வருவதாகவும் தெரியவருகின்றது. யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் அர்ப்பணிப்பான நேர்மையான பல அதிகாரிகள் கடமை யாற்றினாலும் இதற்கு ஒரு சில சிறைச்சாலை அதிகாரிகளும் உடந்தையாக இருந்து வருகின்றனர். இது குறித்துக் கவனம் செலுத்தப்படவேண்டும் எனக் கோரப்பட்டது.

# இலங்கை இராணுவம் மீதான குற்றச்சாட்டுகள் ஆராயப்படும்

## ஐ.நா. செயலரின் பேச்சாளர் தகவல்

கொழும்பு, நவ.10

இலங்கை இராணுவத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் கவனத்தில் கொள்ளப்படும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது, தமிழ் இளைஞர் யுவதிகள் மீது இராணுவத்தினர் சித்திரவதைகளை மேற்கொண்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக ஸ்டீபன் டுஜாரிக் கூறினார்.

இலங்கைத் தமிழர்கள் சிலர் தாம் சித்திரவதைக்கு உட்பட்டதாக சர்வதேச ஊடகங்களிடம் தகவல் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையில் கடமையாற்றுவதற்கு இலங்கைப் படையினர் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றனர் என ஸ்டீபன் டுஜாரிக்கிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கும்போதே ஸ்டீபன் டுஜாரிக் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

# காணாமற்போன மூவர் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்கள் நேற்று ஏற்பு

## யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல்

யாழ்ப்பாணம், நவ.10

இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டுக் காணாமல்போனவர்கள் தொடர்பில் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனுக்களில் மூன்றை யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு ஏற்றுக்கொண்டது.

1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் தென்மராட்சிப் பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன 12 பேர் தொடர்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்று ஆள்கொணர்வு மனுக்கள் தனித் தனியே தாக்கல் செய்யப்பட்டன.

அவற்றில் 9 பேரின் மனுக்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுக் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளைக்கு அமைவாக அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு 9 மனுக்களும் மாற்றப்பட்டுள்ளன.

அந்த 9 பேரின் சார்பாக மீளவும் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நிராகரித்தது. அவை தற்போது மற்றொரு மேல் நீதிமன்றில் விசாரணையில் உள்ளமையாலேயே நிராகரிக்கப்பட்டன என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் சுட்டிக்காட்டினார்.

ஏனைய 3 பேர் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அந்த மனுக்களில் யாழ்ப்பாணம் இராணுவக் கட்டளைத்தளபதி, இராணுவத் தளபதி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்படுகிறது.